# விளக்கு






## நிசங்களின் பகிர்வு





## பரிகாரக் கற்பித்தல்

யூலை – 2004

# விளக்கு

கல்வியியலாளர்களே!

எழுத்தாளர்களே!

விளக்கு சஞ்சிகை
உங்களின் உயர்வான ஆக்கங்களை
எதிர்பார்க்கின்றது.
எழுதுங்கள்.
எமக்கு அனுப்பி வையுங்கள்.

வாசகர்களே!

உங்கள் கருத்துக்களையும்,
விமர்சனங்களையும் வரவேற்கின்றோம்.
எமக்கு எழுதுங்கள்.


தொடர்புகொள்ளும் முகவரி:

ஆசிரியர்
''**விளக்கு**''
ஆசிரியர் வாண்மை விருத்திக்குழு
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
யாழ் வலயக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.

# உள்ளே உள்ளவை

கட்டுரைகள்:-

- ✦ கலாநிதி தி. கமலநாதன்,
- ✦ கலாபூசணம் செ. மெற்றாஸ்மயில்
- ✦ விரிவுரையாளர் க. சுவர்ணராஜா

தொடர்கள்:-

- ✦ சுந்தரம் டிவகலாலா
- ✦ மணலாறு விஜயன்

கவிதைகள்:-

- ✦ மாணிக்கன் இளங்கோ
- ✦ உமாபாரதி
- ✦ பு. திலீப்காந்

சிறுகதை:-

- ✦ செல்லமகேந்திரன்

இத்தாற் சகலருமறிய....
வாசித்தோம் வாசிப்போம்.
வாழ்த்துகிறார்கள்.

இதழ் ஆலோசகர்கள்:-
உயர்திரு. க. சொக்கலிங்கம்
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
உயர்திரு. அ. பஞ்சலிங்கம்
உயர்திரு. பா. தனபாலன்
உயர்திரு. எஸ். சேதுராஜா
உயர்திரு. க. சரவணபவன்

இதழாசிரியர்:-
செ. மகேஷ்

இணையாசிரியர்:-
வே. சிவநேசன்

முகவரி: "விளக்கு"
கல்வி மேம்பாட்டுப்பேரவை,
யாழ் வலயக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.



வெளியீடு: ஆசிரியர் வாண்மை விருத்திக்குழு.

"வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்"

# விளக்கு

அகல்: 05 தாரண வருஷம் திருவள்ளுவர் ஆண்டு - 2035 யூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர், 2004
சுடர்: 10

# வாசிப்போம்...

எனக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணுபவன் எதனையும் தெரிந்துகொள்ள முயற்சிக்காமலேயே இருந்து விடுகின்றான்.

நான் யார்? என்ற வினாவுக்கான விடையை அறியாமலேயே வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். வாழ்தல் என்ற நிகழ்வில் அதற்கேற்ற ஒழுக்கத்துடன் இயங்குவதிலிருந்து விலகிவிடுகின்றனர்.

வாழ்தல் இயங்குதல் என்பது மனிதம் கொண்டுள்ள உயிர்ப்பையும், துடிப்பையும் வெளிப்படுத்தும் உயர்வான பண்புகளின் அசைவுகளாகும்.

உபாத்தியாயர் தனது கற்றலால் பெற்றவற்றைச் செயலால் வெளிக்காட்டி இயங்குபவர். அவரது செயற்பாடுகளே அவரை இனங்காட்டி நிற்கும் சுட்டிகளாகும்.

உபாத்தியாயர் எனும் உயர்நிலையை அடைவதற்கு, உபாத்தியாயர் என்ற மகிமையை உரிமையாக்கிக்கொள்வதற்கு உபாத்தியாயர் நியமனம் பெறுவது மாத்திரம் போதுமானதல்ல. அவரது செயற்றிறனும், சேவைகளும் கணிப்பிடப்படுதல் வேண்டும்.

உபாத்தியாயர் ஆவதற்காய் எடுத்துக்கொண்ட முயற்சிகளும், பயிற்சிகளும், உபாத்தியாயர் எனும் சேவையின் சிறப்பைப் பேணிக் காப்பதற்குத் துணைசெய்யும் வகையில் கடமையாற்ற, பணியாற்ற உதவி நின்றலும் வேண்டும்.

அத்தகைய உபாத்தியாயர்கள் பெருக வேண்டுமெனில் எங்கும், எந்நிலையிலும் உபாத்தியாயர்களாய் விளங்கக் கற்றலும், கற்றலின் வழிநிற்றலும், அவ்வழியே கற்பித்தலும் வேண்டப்படுவனவாகும்.

உபாத்தியாயர்கள் தமது தொழில்சார் அறிவையும், ஆற்றல்களையும் பெருக்கிக் கொள்வதற்கு வாசிப்பு மிக மிக அவசியம் என்பதை மனத்திற் கொள்வோம்.

வாசிப்பின் வழி, அறிதலும், அறிந்தவற்றைச் சொல்லுதலும், எழுதுதலும் புதியனவற்றை உருப்பெறச் செய்யும் சிந்தனைக்கான உந்து சக்திகளாகும். மாணவர்களிடத்தில் கற்றலை வளர்க்க உபாத்தியாயர்கள் யாவரும் கற்றலைத் தொடர்வோம்.

வாசிப்போம். தாய் மண்ணின் வளம் காப்போம்.



# காலத்தால் அழியாக்குறள்..



முப்பாக்கள் மூன்றாலும்
செப்பியுள்ள வாக்கியங்கள்
எக்காலும் நிலைத்திருக்கும்
எம் வாழ்வில் கலந்திருக்கும்

அறவாழ்க்கை வாழ்வதற்கும்
பொருள் தேடிக் கொள்வதற்கும்
பொக்கிஷமாய் அமைந்த குறள்
பொருள் நிறைந்த திருக்குறளே

ஈரடிப்பாக்கள் கொண்டு
பாடிவைத்த குறளெல்லாம்
பார்நிறைந்து கலந்திருக்கும்
காலத்தால் நிலைத்திருக்கும்

காலத்தால் அழியாத
காவிய நாயகன் தந்த
களங்கமற்ற கனிமொழியே
கருத்து நிறை திருக்குறள்

வாழ்வியலின் வாக்கியத்தை
வடித்துவைத்த வள்ளுவனார்
தாழ்வினையும் போக்க வைத்தார்.
தரணியிலே வாழவைத்தார்

பொய்யா மொழிப் புலவர் தந்த
மெய்யான பாக்களெல்லாம்
வையகத்தோர் வாய்களிலே
வரிசையாய் வந்து நிற்கும்

அறம் பொருள் இன்பமுடன்
அத்தனையும் அள்ளித்தந்தார்
திறம்பட அமைந்த குறள்
மறந்திடா மருந்தாகும்.

கல்லாரும் கற்றோரும்
பொருள் இல்லாரும் உள்ளோரும்
எல்லோரும் ஏற்கின்ற
சொல்லாகும் குறளதுவே.

காலம்பல கடந்தாலும்
நவீன யுகம் மலர்ந்தாலும்
எவ்யுகத்தோர் வாழிவினிலும்
இவர்குறள்கள் நிலைத்திருக்கும்.

**மாணிக்கன் இளங்கோ**
தி / ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் வித்தியாலயம்,
மூதூர்.

# கனடாவில்

# எங்கள் கல்விப் பயணம்

கனடாவிலுள்ள, ரொறென்ரோவிற்கான எமது பயணத்தின்போது எமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் நிகழ்வுகளையும் பற்றி இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**கல்விச் சுற்றுலா:-**

அதிபர்கள் சிலருடன் இலங்கையிலிருந்து கனடாவிலுள்ள ரொறண்ரோ நகருக்கு கல்விச் சுற்றுலாவில் சென்றிருந்தோம். கல்வி சம்பந்தமான அமர்வுகள் அனைத்தும் யோக் (Yok) பல்கலைக்கழகத்திலே இடம்பெற்றன. நாம் டொஜ்சூட்ஸ் கொட்டலில் தங்கவைக்கப்பட்டோம். அங்கு இடம்பெற்ற களப்பயணங்களும், கூட்டங்களும் மிகவும் நன்மை பயப்பனவாக அமைந்திருந்தன.

கனடா, 10 மில்லியன் சதுர மீற்றர்களை கொண்ட ஒரு பெரியநாடாகும். இது இலங்கையிலும் பார்க்க 152 மடங்கு பெரியதாகும். ஆனால் இலங்கையின் சனத்தொகையிலும் பார்க்க 12 மில்லியனுக்கு அதிகமான மக்களே அங்கு வசிக்கிறார்கள். (கனடாவில் 31 மில்லியன்) இலங்கையின் சனத்தொகை கிலோமீற்றருக்கு 292 பேர் என்ற விகிதத்தில் உள்ளது. கனடாவின் அலுவலக மொழியாக ஆங்கிலமும் பிரெஞ்சும் காணப்படுகின்றன. படித்தோர் விகிதாசாரம் 99% ஆகும்.

கனடாவில் 10 மாகாணங்கள் உள்ளன. 70 விதமான கலாசார வேறுபாடுகளைக் கொண்ட மக்கள் இங்கே அமைதியாகவும், ஒற்றுமையாகவும் வாழ்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனாலேயே கனடா பலதரப்பட்ட கலாசாரங்களின் சொர்க்கம் என வர்ணிக்கப்படுகின்றது. மக்களின் அனைத்து உரிமைகளும், சுதந்திரமும் நன்கு பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றது. எவ்விதமான, கலை கலாசார, சமய சம்பந்தமான நிகழ்



வுகளும், ஒன்று கூடல்களும், சுதந்திரமாக ஒழுங்குசெய்யப்படுகின்றன. எந்தவொரு விடயத்திலும் சட்டமும் ஒழுங்கும் கடுமை யாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. கனடாவின் வரலாற்றை எடுத்துக் கொண்டால், 150 ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தைக் கொண்டுள்ளது. ஆனால் இலங்கையோ 25 நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்கள் தங்களுடைய மாநகரங்களை மிகவும் திட்டமிட்டு, நல்லமுறையில் அமைத் திருப்பதை காணமுடிகிறது. "நீங்களாகவே கண்டு பிடியுங்கள்" அல்லது "நீங்களாகவே தெரிந்து கொள்ளுங்கள்" (Yourself to Discover) என்ற வாக்கியம் அனைத்து வாகனங்களின் இலக்கத்தகடுகளிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒவ்வொருவரும் கற்றலின் வழி முன்னேறுவதற்கான வழிகளைக் கண்டு பிடிக்கத் தூண்டுவதாக இது அமைந்திருக் கின்றது.

நெடுஞ்சாலைகள் அனைத்தும் விசா லமானவையாகவும், வசதியானவையாகவும் இருப்பதனால், சாரதிகள் இலகுவாகவும், சந்தோசமாகவும் வாகனங்களை செலுத்து கிறார்கள். சாலைகள் பலவாக ஒழுங்க மைக்கப்பட்டு, ஒவ்வோர் பிரிவிற்கும் ஒவ் வொரு மட்டுப்படுத்தப்பட்ட வேகங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவரும் குறிக்கப்பட்ட வேகத்திலும் பார்க்க ஒரு புள்ளி கூட அதிகமான வேகத் தில் வாகனங்களைச் செலுத்த அனுமதிக் கப்படமாட்டார்கள். ஒரு சாரதி பன்னிரெண்டு புள்ளிகளைப் பெறும் நிலையில் அவரது ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படலாம். சில இடங்களில் இந்த வேகங்களைக் குறித்து "சகிப்புதன்மை காட்டப்படமாட்டாது" (Zero tolerance) என்று எழுதப்பட்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

**கனடா மக்களின் பழக்க வழக்கங்கள்:-**

கனடா மக்களின் பழக்கவழக்கங்கள் மிகவும் சுவாரசியமானவையும், புகழ்ச்சிக் குரியனவுமாகும். அவர்கள் மக்களை மிகவும் மரியாதையாக நடாத்துகின்றனர். "Hai எப்படி இருக்கிறீர்கள்?" என்றும் "இந்த நாள் நல்ல நாளாக அமையட்டும்" என்றும் "நன்றாக நித்திரை கொண்டீங்களா? என்றும் பொது இடங்களிலெல்லாம் விசாரிப்பார்கள். வாழ்த்து வார்கள், மாநகரங்களில், தனி அறைக ளைகளைக் கொண்ட கட்டிடங்களில் அநேகர் வசிக்கிறார்கள். நகரத்தின் வீடுகள் மிகவும் கவர்ச்சிகரமான பூந்தோட்டங்களைக் கொண்டிருக்கின்றன. மக்கள் வசிக்கும் இடங்கள், மிகவும் தூய்மையாக இருக் கின்றன. அமைதி அங்கே நிலவுகின்றது. மக்கள் ஒருவரோடொருவர் மென்மை யாகவும், ஆறுதலாகவும், சாந்தமாகவும் கதைப்பதைக் காணலாம். ரொறென்ரோ, நகரத்தில் மட்டும், 7 பல்கலைக்கழகங்களும், 50 தொழில்நுட்பக் கல்லூரிகளும், பாடசா லைகளும் இயங்குகின்றன.

**கல்வி:-**

கனடாவின், ஒவ்வொரு மாகாணத் திலும் அதற்குரிய கல்வித்திட்டங்கள் இருக்கின்றன. நாங்கள் சென்ற இடமான ஒன்ராறியோ மாகாணத்தின் கல்வித் திட்டத்தை ஒன்ராறியோ அரசாங்கமே தயாரித்து நடைமுறைப்படுத்துகிறது.

கனடாவில் மூன்று வகையான பாடசாலைகள் இயங்குகின்றன.

1. பொதுப் பாடசாலைகள்
2. றோமன் கத்தோலிக்க பாடசாலைகள்
3. பிரெஞ்சு பாடசாலைகள்.

ஆறு வயது தொடக்கம் பன்னிரண்டு வயதுடைய பிள்ளைகளுக்கு கட்டாயக் கல்வி கற்பிக்கப்படவேண்டும் என கனடா வின் கல்விக்கொள்கை வலியுறுத்துகிறது.

செயல்முறை கற்றல் கற்பித்தலுடன், ஆராய்ந்து கற்கும் வகையிலும் கற்பித்தல் முறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஏனைய நாடுகளிலும் பார்க்க கனடாவே அநேக இலங்கை அகதிகளுக்கு புகலிடம் அளித்துள்ளது. ஒருவர் தங்க ளுடைய தாய்நாட்டில், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறு சித்திர வதைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தால் அவர் அதனை நிரூபிக்கும் நிலையில் கனடா அவருக்கு புகலிடம் அளிக்கிறது. விசார ணையின் பின்னரே அகதிகள் பற்றிய முடிவை அரசாங்கம் எடுக்கின்றது. தற்போது, உலகிலுள்ள 18 நாடுகளில் மக்கள் அச்சத் துடன் வாழ்கிறார்கள் ஏன்று கனடா அட்ட வணைப் படுத்தியுள்ளது.

**கனடாவின் காலநிலை:-**

கனடாவில் காலநிலை முக்கிய இடத்தை வகிக்கின்றது. தொலைக்காட்சி யில் 23 அலைவரிசைகள் காலநிலை அறிவிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. குளிர் காலமானது மார்கழியில் தொடங்கி, மார்ச் வரை நீடிக்கின்றது. இளவேனில் காலமும், இலையுதிர்காலமும் மிகவும் குறுகியது. கோடைகாலத்தில், வெப்பம் அதிகமாக இருக்கும். "இன்று காலநிலை எப்படி இருக் கின்றது'' என்ற கேள்வியைப் பலரும் கேட்பதை நாம் அடிக்கடி கேட்கக்கூடியதாக இருக்கும். ஏனெனில் காலநிலை மாற்ற மானது அடிக்கடி நிகழ்ந்துகொண்டே இருக்கும். ஐஸ்கொக்கி, கூடைப்பந்தாட்டம், Base ball ஆகியவை கனடாவில் அதிகமாக விரும்பப்படும் விளையாட்டுக்களாகும்.

பொலிசாரை நாம் வீதிகளில் காண முடியாது. மிக அரிதாகவே இவர்கள் தோன்றுவர். ஏனெனில் சட்டத்தையும்


## கலாநிதி தி. கமலநாதன்
பீடாதிபதி.
யாழ் கல்வியியற் கல்லூரி.


ஒழுங்கையும் மிகவும் கட்டுப்பாட்டுடன் கடைப்பிடிக்கும் மக்கள் இங்கே வாழ்ந்து வருகின்றார்கள்.

மின்விளக்குகளை எரியச்செய் வதற்கு மின்ஆளிகளை (Switches) கீழி ருந்து மேல்நோக்கி அழுத்துவதும் அணைப் பதற்கு மேலிருந்து கீழாக அழுத்துவதும் இங்கு வழமையாக உள்ளது. வாகனங்கள் வீதியின் வலது பக்கத்தினாலேயே செல் கின்றன.

மதுபானங்களைத் தவிர வேறு எந்தப் பொருளிற்கும் நிர்ணயிக்கப்பட்ட விலை குறிக்கப்படவில்லை. எரிபொருள் நிரப்பும் நிலையத்தை Gas station என்றும், மலசல கூடங்களை wash rooms எனவும் அழைப்பார்கள்.

ரொறன்ரோவில் தொலைபேசி அழைப்புக்கள் இலவசமாகவே வழங்கப்படு கின்றன. ஒட்டாவா நகரம் கனடாவின் தலை நகரமாகும். இங்கேதான் இலங்கையர்கள் அதிகமாக வசிக்கின்றார்கள்.

கனடா மிகவும் அமைதியான நாடாகும் மக்கள் அனைவரும், சந்தோச மாகவும், அமைதியாகவும் வாழ்கின்றனர். இலங்கையிலிருந்து 30 பாடசாலை அதிபர் களும், நானும், அங்கு செல்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பம் மிகவும் அரியதோர் சந்தர்ப்பமாகும் எனக் கருதுகிறேன்.

இந்தச் சுற்றுலாவின் நினைவுகள் என்றும் எம்மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளன.

❖❖❖

உருவம் சிறிது என எண்ணாதே, ஊசி உருக்கினாற் செய்யப்பட்டது.

- யாரோ -

# கலைத்திட்டத்தில் நாட்டுப்புறவியலை ஒரு பாடமாக்குவோம்

கலாபூசணம் செ. மெற்றாஸ்மயில்

**நாட்டுப் புறவியலின் முக்கியத்துவம்:-**

அரசாங்கப் பாடசாலைகளில், குடியியல், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களை தனித்தனிப் பாடங்களாகக் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பல்கலைக்கழகங்களிலும் இப்பாடங்களுக்குத் தனித்தனியே துறைகள் உண்டு. வாழ்வியலைப் பின்நோக்கி கற்கும் தொடர் பாடங்களாக மேற்படி பாடங்கள் காணப்படுகின்றன. இப்பாடங்கள் மனிதனின் நடவடிக்கைகள், இயற்கை அமைப்பு என்பவற்றை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. மனிதன் தோன்றிய காலத்திலிருந்து குழுவாகவும், சமூகமாகவும், சமுதாயமாகவும் வாழப் பழகிக்கொண்டதையும், தனக்கென அரசு அமைத்துக் கொண்டதையும், பின் சட்டங்கள் ஆக்கிக் கொண்டதையும், தம்மை நிர்வகிப்பதற்காக, குடிஆட்சி, முடிஆட்சி என்பவற்றை ஏற்படுத்திக்கொண்டதையும் வேறு பல விடயங்களையும் குடியியல் மூலம் அறிகின்றோம். இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட ஆட்சிகளிற்கு காரணமான மன்னர்களின் போராட்டம் நாடுகளுக்கிடையிலான போராட்டம், நாட்டுக்குள் ஏற்பட்ட போராட்டங்கள் என்பவற்றையும், சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் என்பவற்றை நிலைநாட்ட ஏற்படுத்திக் கொண்ட உரிமைப் போராட்டங்களின் பெறுபேறுகள், மன்னர் ஆட்சியின் வரலாற்று, ஜனநாயக ஆட்சி வரலாறு போன்ற கடந்தகால நிகழ்ச்சிகளையும் வேறு பல வரலாற்று அம்சங்களையும் கொண்டு திகழ்கிறது. வரலாற்றின் மூலம் அறிகிறோம். மனிதனின் வாழ்வுக்கேற்ற இயற்கையமைப்பு, காலநிலை, பொருளாதார வளத்துக்கான நிலவமைப்பு, மற்றும் கடல், மலை, நீர், குடியிருப்பு, தொழில் நிலங்கள் ஆகியவற்றையும், முல்லை, பாலை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என்ற ஐவகை நிலங்களையும் இயற்கை வளத்தினையும் வேறுபல விடயங்களையும் புவியியல் தந்து உதவுகின்றது.

ஆனால் குடியியல், வரலாறு, புவியியல் மூலம் அறிவைப் பெறும் மாணவர்கள் பண்பாளர்களாக சமுதாயத்தில் உருவாக மேலும் உதவுவது நாட்டுப் புறவியலாகும். பக்திசெய்து, தொண்டுபுரிந்து, பண்பாளராக வாழ்ந்த எம் மூதாதையரின் பண்பாட்டுக் கோலங்களை மாணவர்கள் கற்பதனால் அறிவு வளர்ச்சியுடன் பண்பாட்டு வளர்ச்சியும் இணைந்த நல்ல மனிதர்களாக வாழ, உருவாக முடியும். இதற்கு நாட்டுப்புறவியல் உதவும் என்பது நிதர்சனம். ஒருவனுக்கு ஒருத்தி என்ற இல்லறவாழ்வு வாழ்ந்து, மற்றவர்கள் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்டு, தெய்வ நம்பிக்கை வைத்து கடவுளுக்கு பணிந்து களவில்லா வாழ்க்கை நடத்தி, கிடைக்கும் நேரங்களில் கும்மி, கோலாட்டம், கரகம், காவடி, கூத்து, தெருக்கூத்து, நாடகம் என்பன ஆடியும் பாடியும் கலைமூலம் பக்குவம் பெற்று நம்முன்னோர் வாழ்ந்து

காட்டிய அவர்களின் பண்பாட்டுக் கோல வரலாற்றை திசைமாறிக் கொண்டு செல்லும் மாணவச் சமுதாயம் நாட்டுப்புறவியல் எனும் பாடம் ஊடாக கற்க வழிசெய்யவேண்டும்.

### தமிழக பல்கலைக்கழகத்தில் தனித் துறை:-

"நாட்டுப்புறஇயல் ஆய்வு" என்னும் நூலின் முகவுரையில் டாக்டர் சு. சக்திவேல் பின்வருமாறு கூறுகிறார்.

"தமிழகத்தில் நாட்டுப்புறவியல் வளர்ந்து வரும் துறைகளுள் ஒன்றாகும். இந்தியவியல், மானிடவியல், மொழித் துறைகளின் பகுதியாகச் செயல்பட்ட நாட்டுப் புறவியல் இன்று தனியொரு துறையாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொடங் கப்பட்டுள்ளது. இத்துறை மானிடவியல். சமூகவியல். உளவியல், தத்துவம், வரலாறு, மொழியியல் ஆகிய துறைகளுடன் பின்னிப் பிணைந்து வளர்ந்து வருகிறது. ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுவதே நாட்டுப் புறவியலாகும். மண்ணின் மைந்தர் தம்மனக்கருவறையில் கருக் கொண்டு உருப்பெற்று உலாவரும் உள்ளத்தின் உண்மையான உணர்ச்சி வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள். இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்றால் நாட்டுப்புறவியல் சமுதாய வளர்ச்சியைக் காட்டும் கண்ணாடி எனலாம். நாட்டுப்புறவியல் தமிழகத்தில் ஐம்பதுகளில் முகிழ்த்து அறுபதுகளில் அரும்பி எழுபதுகளில் போதாகி எண்பது களில் மலராகி மணம் பரப்புகிறது. ஐம்பது ஆண்டுகளாக இத்துறை பற்றிச் சிந்தனை இருந்தாலும், இச்சிந்தனையில் தொடர்ச்சி இல்லை. ஆய்வுகள் ஆங்காங்கே தீவுக ளாகவும், திட்டுக்களாகவும் நின்றன. நாட்டு விடுதலைக்குப் பின்னர்தான் இத்துறையில் தொகுப்புப் பணி விரைந்து செயல்பட்டது" என்கிறார்.

இவருடைய கூற்றிலிருந்து நாட்டுப் புறவியலில் தமிழகம் ஏற்கனவே எவ்வளவு அக்கறை கொண்டிருந்தது என்றும், இன்று தமிழக பல்கலைக்கழகத்தில் ஒரு துறை யாக்கி தீவிரமாக செயல்படுகிறது என்ப தையும் கண்டுகொண்டோம். இதனை நமது நாட்டிற்கும் ஒரு பாடமாகக் கொள்வோம்.

### நாட்டுப்புறவியலின் வகைகள்:-

நாட்டுப்புறவியலை பலரும் பலவிதமாக வகுத்துள்ளார்கள். பொதுவாக பின் வருமாறு பிரிக்கலாம்.

### நாட்டுப்புறவியல்:-

| **நாட்டுப்புற இலக்கியம்** | **நாட்டுப்புறப் பழக்கங்கள்** | **நாட்டுப்புறக் கலைகள்** | **நாட்டுப்புற அறிவியல் மற்றும் தொழில் நுட்பம்** |
|---|---|---|---|
| நாட்டார் பாடல்கள் | நம்பிக்கைகள் | ஆடல் | நாட்டுப்புற மருத்துவம் |
| கதை | வழக்கங்கள் | நடனம் | நாட்டுப்புறத் தொழில் |
| கதைப்பாடல் | சடங்குகள் | கூத்து | |
| | | இசைநாடகம் | |
| | | தெருக்கூத்து | |
| | | வண்ணஓவியம் | நாட்டுப்புற கட்டிடங்கள். |
| பழமொழி | விழாக்கள் | சிற்பங்கள் | |
| விடுகதை | விளை யாட்டுக்கள் | | |
| புராணம் | | | |
| | | கைவினைப் பொருட்கள் | |
| | | வரைபு படங்கள் | |
| | | ஆடை அணிகலன் | |

நாட்டுப்புறவியல் பல பக்கங்களைக் கொண்டது என்பதைப் பார்த்தோம். இச்சிறுகட்டுரையில் முழுப் பக்கங்களையும் குறிப்பிடமுடியாது. எனவே ஒரு முக்கிய பக்கமான பாரம்பரிய கலைகளில் நிகழ் கலை வடிவங்கள் சிலவற்றையும் அதன் வரலாற்றையும் சற்று நோக்குவதன் மூலம் நாட்டுப்புறக்கலையின் விமர்சனத்தைப் பெறமுடியும் என நினைக்கின்றேன். மரபுக் கலைஞர்களின் வாழ்விலிருந்து பிரிக்க முடியாத கலையாகவே மரபுக்கலையிருந்தது. அக்கலை தெய்வீகமானது. மன்னர்கள் வளர்த்த கலை, கலைவடிவங்கள் அற்புதமானவை; ஜனரஞ்சகமானவை; உடலைப் புல்லரிக்கச் செய்பவை. ஆனால் இடைப்பட்ட காலங்களில் இக் கலைகள் பாமர மக்களின் கலையாகவே வெளித்தோற்றத்திற்கு காணப்பட்டன. எனினும், அவை எமது முன்னோர்களின் நம்பிக்கைகளையும், சடங்குகளையும், வழிபாட்டுமுறைகளையும் அழியாது பரம்பரை பரம்பரையாக காப்பாற்றி வந்துள்ளன. வளர்ச்சியும், மாற்றங்களும் நாட்டில் ஏற்பட்டதற்கேற்ப இவர்களது மதநம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், கலைகள் என்பவற்றிலும் வளர்ச்சியும், மாற்றமும் ஏற்படலாயின. நம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், கலைகள் யாவும் காலத்திற்குக் காலம் மாறுபடுவதுடன் அவை மக்களது செய்தொழில், சாதி, வயது, பால், மதம், கல்வியறிவு, உலக அனுபவம், மனநிலை, உடல்நிலை, பொருளாதாரநிலை சூழல் நவீன கண்டுபிடிப்புகள், என்பவற்றுக்கேற்ப பல மாறுதல்களும் ஏற்படலாயின. மரபு நிகழ்வுகலைகளை பின்வருமாறு வகைப் படுத்தலாம்.

### மரபுக்கலைகள் (நிகழ்கலைகள்)

இலங்கையின் செந்நெறிக் கலையல்லாத மரபுக்கலைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



### 01. நாட்டார் பாடல்கள்

01. தாலாட்டுப் பாடல்கள்
02. குழந்தைப் பாடல்கள்
03 விளையாட்டுப் பாடல்கள்
04. காதல் பாடல்கள்
05. திருமணப் பாடல்கள்
06. கொண்டாட்டப் பாடல்கள்
07. நெல் விவசாயப் பாடல்கள்
08. தொழிற் பாடல்கள்
09. மீன்பிடிப் பாடல்கள்
10. கதைப் பாடல்கள்
11. சமயப் பாடல்கள்
12. ஒப்பாரிப் பாடல்கள்

### 02. நிகழ்கலைகள்

01. கிராமிய நடனங்கள்
02. காவடி
    - அ) பறவைக் காவடி
    - ஆ) பால்காவடி
    - இ) பன்னீர் காவடி
    - ஈ) செடில் காவடி
03. கும்மி
    - அ) கைகொட்டுக்கும்மி
    - ஆ) குடமூதல் கும்மி
04. கோலாட்டம்
05. கரகம்
    - அ) சக்திக்கரகம்
    - ஆ) ஆடுகரகம்
    - இ) செம்புக் கரகம்
06. பொம்மலாட்டம்
07. ஒயிலாட்டம்
08. பொய்க்கால் குதிரையாட்டம்
09. சிலம்பாட்டம்
10. மயிலாட்டம்
11. வேடராட்டம்
12. பேய் ஆட்டம்

13. வில்லுப்பாட்டு
14. கூத்து அ) வடமோடி
ஆ) தென்மோடி
இ) வடபாங்கு
ஈ) தென்பாங்கு
உ) கரையோரப்பாங்கு
ஊ) முல்லைப்பாங்கு
எ) சிந்து நடைக்கூத்து
(காத்தவராயன்)
15. தெருக்கூத்து
16. மகுடிக்கூத்து
17. பறைமேளக்கூத்து
18. இசைநாடகங்கள்

என்பனவற்றை வகைப்படுத்திக் கூறலாம். இவை பற்றி விரிவாக இக்கட்டுரையில் குறிப்பிடமுடியாது. இக்கலைகளுக்கு அடிப்படையில் ஒரு ஒற்றுமை உண்டு. அதாவது இக்கலைகளுக்கு மெருகூட்டும், அழகூட்டும் நாட்டார் இசைப் பாடல்களோ கூத்துப் பாடல்களோ தனித்தன்மையைக் கொண்ட இசையைக் கொண்டுள்ளன.

இக்கலைகளில் சில பிரதான கலைகளைப் பற்றிய சிறுகுறிப்பை நோக்குவோம்.

**நாட்டார்பாடல்:-**

நாட்டார் இசை மரபின் இதயம் கிராமங்களே. மக்களின் உணர்ச்சிப் பெருக்குகளே நாட்டார் பாடல்களாகும். நாட்டார் பாடல்களின் இசையுடன் சேர்ந்த ஆடல்களே கிராமியக்கலை வடிவங்களாகும். இப்பாடலும் ஆடலும் சேர்ந்தோ தனித்தோ இயங்கும் பொழுது கிராமங்களில் ஆத்மீகம் மணக்கும் ஒழுக்கங்களில் உயிரோட்டம் இருக்கும். நாட்டார் இசைப் பாடல்கள் மழலை இன்பம் போன்றதொரு மயக்கும் இன்பத்தை அளிக்கும் தன்மை வாய்ந்தவையாகும்.

இயற்கையோடு இணைந்து இன்பமாக வாழ்ந்தமக்கள், தமது உணர்ச்சி வெளிப்பாடாக தாம்காணும், தாம் சந்திக்கும் வெற்றி, தோல்வி, துன்பம், இன்பம்



என்பவற்றைப் பற்றி பாடினார்கள். பாமர மக்களினால் இயற்றப்பட்டு பரம்பரை பரம்பரையாக வாய்மொழியாக பல்லாண்டு காலமாக தொடர்ந்து பேணப்படும் நாட்டார் பாடல்கள், கிராமத்து மக்களின் இன்ப துன்பங்கள், தொழில்துறைகள், வாழ்க்கை நடைமுறைகள், நம்பிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புகொண்டிருந்தன. அதனைப் பாடிய கிராமத்துப்புலவன் பெரிய வித்துவானல்லன். இலேசான ஓசையில் பாடக்கூடியவிதத்தில் செந்நெறியில் கூறுவதாயின் அரை ஸ்தாயில் பாடக்கூடியதான எளிமையான நடையில் பாடினான். பாடிய அவன் தன்னை இவ்வாறு அறிமுகப்படுத்துகின்றான்.

**பாட அறியேன், படிப்பறியேன், பள்ளிக்கூடம் நானறியேன்**
**ஏடறியேன், எழுத்தறியேன், எழுதுவாரை நானறியேன்**
**ஏட்டிலே எழுதவில்லை. எழுதி நான் படிக்கவில்லை.**
**வாயிலே வந்தபடி வகையுடனே நான் படிப்பேன்.**

இவ்வாறு கூறியதிலிருந்து பாடல்களின் ஓசை, இசை, கலைகளின் வெளிப்பாடுகள் என்பன எந்த யாப்புக்கும் வகைக்கும் எட்டாதவை என நிருபிக்கின்றன.

பல தொழில் செய்வோரும் தங்கள் தங்கள் கடும் உழைப்பின் வழி உல்லாசமாகக் களிக்கத் தெம்மாங்கு பாடி மகிழ்ந்தனர். "ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பு இருக்காது" ஆட்டமும் பாட்டும் இசையோடு நிகழ்ந்தன. ஆகவே இசைப் பாடல்கள் தோன்றின. தொழில்கள் யாவற்றிற்கும் பாடல்கள் எழுந்தன. உழுதல், விதைத்தல், களைபிடுங்கல், அரிவி வெட்டல், உப்பட்டி கட்டுதல், சூடுமிதித்தல், ஏற்றம் இறைத்தல், நெல்குற்றல், வண்டி ஓட்டுதல், படகு ஓட்டுதல் என்ற தொழில்கள் ஒவ்வொன்றுக்கும் பாடல்கள் பாடினர். எல்லாவற்றிலும் இசையே முதுகெலும்பாக இருந்தது. இளைப்பாறும் நேரங்களில் ஊஞ்சல் பாடல்களும், பல்வகை விளையாட்டுப் பாடல்களும் உருவாகின. கிராமங்களில் வாழ்ந்தவர்களினது சமயத்துடன் இணைந்த சடங்குகளுடன் தொடர்பான கிராமியக் கலைகள் முக்கிய இடம்பெற்றன. கிராமியக் கலைகளின் ஆட்டமும், பாட்டும் பக்திமயப்பட்டதாக இருந்தன. தமது பிரதேசத்தின் தெய்வம், ஊர் என்பன இப்பாடல்களில் இடம்பெற்றதுடன் இசையே அவர்களின் உணர்வுக்கு குதூகலம் அளிப்பதாக இருந்தது.

**நாட்டாரிசை வகை:-**

நாட்டார் கலைகளின் இசை மரபை, நாட்டார் பாடல் இசையினூடாக விரிவாக ஆராய்வு செய்வதன் மூலம் கிராமியக் கலைச் சிறப்புக்களை கண்டு கொள்ளலாம். நாட்டார் பாடலின் இசை மரபை பின்வருமாறு வகைப்படுத்திப் பார்க்கலாம்.

1. மரபு வழி நாட்டாரிசைப் பாடல்கள் (மூலம்)
2. நாட்டாரிசை தழுவிய பாடல்கள் (பொருள் மாறுபட்டிருக்கும்)
3. சாஸ்திரிய இசையுடனான நாட்டார் பாடல்கள் (இசை மாறியிருக்கும்)
4. சினிமா இசையுடனான நாட்டார் பாடல்கள் (இசை மாறியிருக்கும்)

இன்று மேற்கூறிய நான்கு வகைப் பாடல்களும் "நாட்டார் பாடல்" என்ற வாக்கியத் திற்குள் அடக்கியே அழைக் கப்படுகின்றது குறிப்பிடத்தக்கது.

**மரபு வழி நாட்டாரிசைப் பாடல்கள்:-**

இவை இசையாலோ பொருளாலோ, மொழியாலோ இயைபுபடுத்தப்படாத மூலமான பாடல்களாகும். இப்பாடல் களின் இசையை தனி இசை, கூட்டிசை என இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்.

தனி இசை ஒருவராலும், கூட்டிசை பலராலும் இசைக்கப்படும்.

**நாட்டாரிசை தழுவிய பாடல்கள்:-**

நாட்டார் இசையைப் பழைமையின் வழி அப்படியே பாடல்கள் கொண்டிருக்கும். ஆனால் சில பாடல்கள் புதியதாக இயற்றப் பட்டுமிருக்கும். கருப்பொருள்கள் வேறாகவும் எழுத்து, சொல், வசன நடை என்பன மாறியும் இருக்கும். எழுத்துச் சொல் வசன நடைகள் தற்கால வழக்கிற்கேற்ப ஒழுங்கமைந்தும் இருக்கும்.



**சாஸ்திரிய இசையுடனான நாட்டார் பாடல்கள்:-**

அதாவது நாட்டார் பாடல்களை, நாட்டரிசையை நீக்கி கர்நாடக இசையி லுள்ள இராகங்களைப் புகுத்தி புதிய இசையுடன் பாடுதல் இதுவே பெரும்பாலான பாடசாலைகளில் இடம்பெறுகிறது.

**சினிமா இசையுடனான நாட்டார் பாடல்கள்:-**

திரைப்படங்களில் சினிமா இசையு டனான நாட்டார் பாடல்கள் பல உள்ளன. ஒப்பாரியே சினிமாப் பாடல்களாக பாடப்பட்டுள்ளன. (உ-ம்)

"சில்லென்று பூத்த சிறு நெல்லுக் காட்டினிலே
........................ எனத் தொடங்கி.
செந்தமிழ் தேன் மொழியாள் நிலாவென சிரிக்கும் மலர் கொடியாள்"

என தொடரும் பாடலை ஒப்பாரிப் பாடலுக்கு உதாரணமாகக் கூறலாம். "ஏரிக்கரையினிலே போறவளே பெண் மயிலே"............ என்ற பிரசித்திபெற்ற பாட்டை சினிமாப்பாடலாக உருவெடுத்த நாட்டுப் பாடலுக்கு உதாரணமாகக் கூறலாம்.

**கூத்து:-**

சிலப்பதிகாரமே கூத்தின் முதற் காவியமாகும். எனினும் அதனைப் படிக்கும் நாடக இலக்கியமாக மட்டுமே கொள்ள முடியுமேயன்றி நடிக்கும் நாடகமாகவோ, பாமர மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய, சுவைக்கக்கூடிய எளிமையுடையதான, கூத்தாகவோ கொள்ளுதல் இயலாது. ஆனால் இதுவோ முதல் கூத்து நூலாகும். "நாடகமேத்தும் நாடகக் கணிகை" என மாதவியை அறிமுகம் செய்யும் இளங் கோவடிகள் மேலும் -

"நடமே நாடகம் கண்ணுள் நட்டம்
படிதம் ஆடல் தாண்டவம் பரதம்



ஆலுதல் தூங்கல் வாணி குரவை
நிலையம் நிருத்தம் கூத்தெனப் படுமே."

என்பதைக் கொண்டும் அறியலாம். அத்துடன் நடன, நாடகக் கலைஞர்கள்

"ஆடலும் பாடலும் அழகும் என்றிக் கூறிய மூன்றின் ஒன்று குறை படாமல்"

இருந்தால்தான் வெற்றி பெறமுடியும் என்றும் கூறுகின்றார்.

கூத்து என்னும் கலையை எல்லோ ராலும் ஆடமுடியாது. ஆடக்கூடிய உடல் தோற்றமும், பாடக்கூடிய குரல் வளமும் இணைந்த கலைஞர்களே இதனைச் செய்ய முடியும்.

"கூத்தாடுவதும் குந்தி இருப்பதும்-ஆத்தாது அவன் செயல்"

என ஒரு பழமொழி உண்டு. இறைவனின் அனுக்கிரகம் கிடைத்தவர்கள் தான் இதைச் செய்யமுடியும். என்ற நம்பிக்கை இருந்தது.

நெடுங்கால வரலாற்றுச் சிறப்பும், எக்காலத்திலும் மக்களின் மனதைக் கவர்ந் திடும் ஆற்றலும் கொண்ட இக்கூத்துக் கலைகள் முற்காலத்தில் மன்னர்கள் வளர்த்த மாபெருங்கலைகளாகும்.

பழந்தமிழர்களின் பண்பாடுகளையும், வாழ்க்கை நெறிகளையும், அறம்பொருள் இன்பம் ஆகிய இயற்கைக் குறிக்கோள்

களையும், பிரதிபலித்துக் காட்டும் கதையம் சங்களையும் அரசர்களின் பெருமை களையும், வெற்றிச் சிறப்புக்களையும், அந்தந்த நாட்டு மன்னர்களின் வீரப் போர்த் திறங்களையும், அப்போரில் தோற்றோடிய மன்னர்களின் அவல நிலைகளையும், நல்லோர்களின் உயர்வையும், தீயோர்களின் தாழ்வையும் கதைகளின் கருப்பொருளாகக் கொண்ட வரலாற்று நிகழ்ச்சிகளை மைய மாகக் கொண்டே, கூத்துகள் இடம்பெற்று வந்துள்ளன. கூத்துக்கலைக்கு மக்களை வசீகரிக்கும் வலு மிகவுண்டு. மக்களுக்கு ஏதும் செய்தி சொல்ல வேண்டுமானால் அதனைக் கூத்துக்கலை வடிவத்தினூடாக மிக விரைவாகக் கூறிவிடமுடியும்.

யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரியினால் தயாரிக்கப்பட்ட நவீன நாடகங்களிலும் கூத்து வடிவங்களையும், கூத்திசையையும் சேர்த்து மக்களிடம் வெற்றி பெற்றனர். "பொறுத்தது போதும்", "கந்தன் கருணை" என்னும் நாடகங்களை உதாரணமாக குறிப்பிடலாம்.

ஒப்புயர்வற்ற பரம்பொருளோடு இணைத்து வைத்துப் போற்றி வளர்க்கும் பேறுபெற்ற கூத்துக்கலையைத் தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்தனர். அக்கலையில் சிறந்தி ருந்தனர் என்பதற்குப் பண்டைய தமிழ் இலக்கியங்களில் காணும் குறிப்புகள் சான்று பகர்வனவாய்த் திகழ்கின்றன. மனிதனின் வாழ்க்கைத் தேவையின் பூர்த்திக்குப் பிறகும், அவன் சிந்தனைக்கு விருந்தாக இத்தகைய கவின் கலைகளை வளர்த்துக்கொள்வதில் முன்னோர்கள் ஆர்வ முள்ளவர்களாயிருந்திருக்கின்றார்கள்.

மரம், துணி, மண், தோல் ஆகிய வற்றால் செய்த பாவைகளால் நடித்துக் காட்டப்பட்ட பொம்மலாட்டம் அல்லது பாவைக்கூத்து ஆகிய கூத்து வகைமூலம் பல வகைக் கதைகளைக் கற்பித்தும், நாட்டில் அவ்வப்போது நிகழும் சில உண்மை நிகழ்ச்சிகளுக்கு உருவகம் தந்தும் அவைகளுக்கேற்ற வேடங்களைப் புனைந்தும், நடித்துக் காட்டி மக்களை மகிழ்வித்து வந்துள்ளரென பண்டைய இலக்கியங்கள் கூறுகின்றன. இக்கூத்துக்கள் வேத்தியல் என்றும், பொதுவியல் என்றும் இரு வேறு முறைகளில் நடித்துக் காட்டப் பெற்றதாகச் சிலப்பதிகார உரையாசிரியரால் எடுத்துக் கூறப்படுகிறது.

மன்னர்களுக்கென்று தனிஇடத்தில் நடித்துக் காட்டப்பெறும் கூத்துக்களை வேத் தியல் என்றும், அவை தரத்தில் உயர்ந்த தாகவும், சிறப்புடையதாகவும், இருக்கு மென்றும், மக்களுக்காகப் பொது இடங் களில் நடித்துக் காட்டப்பெறும் கூத்துக் களைப் பொதுவியல் என்றும் கூறினர். தமிழகக் கூத்துக்கலைஞர்கள் பல்வேறு நாடுகளுக்கும் சென்று ஆங்காங்குள்ள பேரரசர்கள், சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் அவை முன்பு ஆடியும், பாடியும், நடித்தும் தங்களின் கலைத்திறத்தால் சன்மானம் பெற்றுள்ளனர். இக்கலைஞர்களின் திறமையைப் புகழ்ந்து பல அரசர்கள் மானியங்களாகச் சிற்றூர் களையும், நிலங்களையும் பல்வேறு பரிசுப் பொருட்களையும் வளங்கிச் சிறப்பித் துள்ளனர். இவ்வாறான சன்மானத்தையும் மதிப்பையும் பெற்ற கலைஞர்கள் தமது வாழ்வை நலம்படுத்தி ஒழுக்கசீலர்களாக வாழ்ந்துகாட்டவேண்டியவர்கள் ஆயினர். ஆனால் அவர்கள் நெறி தவறியதினால் கூத்துக்கலைக்கே இழுக்கு ஏற்பட்டது.

செல்லும் இடங்களிலெல்லாம் இக்கலைஞர்களுக்கு மன்னர்களாலும் மக்களாலும் வழங்கப்பட்ட அளவற்ற செல்வங்கள் இவர்களை ஆடம்பரபிரியர்களா கவும், நெறியற்றவர்களாகவும், கட்டுப்பாடும் ஒழுக்கமும் இல்லாதவர்களாகவும், வாழச் செய்தன. இவ்வாறான கலைஞர்களின் வரலாற்றினால் பிற்காலத்தில் கூத்துக்

கலையை இளிவாக நோக்கும் பாங்கு ஏற்பட்டது. இது நிரந்தரமானது அல்ல. சமுதாயம் வளர்ச்சி அடைந்து, கல்வி அறிவு பெருகி, சமத்துவம், சகோதரத்துவம், மனித நேயம் என்பவற்றுக்கு உட்பட்டு பிற்கா லத்தின் ஒழுக்கசீலராக வாழக் கற்றுக் கொண்டனர்.

இரு பாலாரும் இணைந்த வகுப் பறைக் கல்வியும், பல்கலைக்கழகக் கல்வியும், ஒருவரை ஒருவர் புரிந்து பழகக் கூடிய மனப்பக்குவத்தைக் கொடுத்துள்ளது. எனவே இந்த சமுதாய அமைப்பிலே கலையிலே ஈடுபடுபவர்கள் கலைமூலம் சிறப் படைய வாய்ப்புண்டு.

இலங்கையைப் பொறுத்தவரை இற்றைவரை கூத்துக்கலையானது பெரும் பான்மையாகப் பாமர மக்களிடமே உள்ளது. இதனால் படித்தவர்கள், இதனைப் பாமர மக்களின் கலையாக எண்ணி அக்கலை யைப் பயிலப் பின்னிற்கின்றனர். பாமர மக்களின் கலையென நோக்கும் இக் கலையை பல்கலைக்கழகக்கலையாக அங்கீகரிக்கும் போது அதன் மேன்மை விளங்க, அதை மாணவர்கள் கற்க முன்வரு வார்கள் என்பது எமது கருத்தாகும்.

இலங்கையின் தமிழ்ப் பிரதேசத் திலுள்ள கூத்துக்களை வடமோடி, தென்மோடி, வடபாங்கு, தென்பாங்கு (மன்னார்) கரை யோரப்பாங்கு, முல்லைப்பாங்கு என வகைப் படுத்தியுள்ளனர். இவற்றுக்கு மரபுரீதியான பல வடிவங்களில் ஆக்கத்திலும், பாட்டிலிலும் தனித்துவம் உள்ளன.

இத்துறை சார்ந்த பேராசிரியர்கள், பலர், மக்கள் விருப்பத்திற்கேற்ப ஜனரஞ் சகமாக்க விரும்பும் கூத்து, நடன முறை களுக்குள் நாட்டிய நடனவகைகளையும் புகுத்தி மக்களிடம் வரவேற்பை பெற முயல் கின்றனர். இதற்கு அண்ணாவிமார்களும் உடந்தையாகவுள்ளனர். இந்நிகழ்வானது மரபுவழிக்கூத்தினை அழிக்கும் முயற்சி யாகும் என்பது என் போன்ற கூத்துக்கலை சார்ந்தோரின் கருத்தாகும்.

**தெருக்கூத்து:-**

தமிழ் நாடக வரலாற்று நூலில் கிராமிய தெருக்கூத்துப் பற்றி, கலைஞர். கு.சா.கிருஷ்ணமூர்த்தி தனது அனுபவத்தை இவ்வாறு தெரிவிக்கின்றார்.

“கிராமங்களில் கோயில் திடல் களிலும், களத்து மேடுகளிலும், தெருக் களிலும் மேடைக்கு மட்டும் கீர்த்துக் கொட்டகை அமைத்துத் திறந்தவெளியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு கண்டுகளிக்கும் வண்ணம் தீவெட்டிப் பந்தங் களைப் பிடித்தும் பிறகு காடா விளக்கு களை வைத்துக்கொண்டும் அதற்கும் அடுத்த நிலையில் கியாஸ் (Gas) லைட்டுக் களை வைத்துக்கொண்டும், வெறும் வெள்ளைத்திரையை இரண்டுபேர் பிடித்துக் கொள்ள அதற்குப் பின்னே மறைந்து நின்று அரிதாரப்பூச்சுடனும், அட்டைக் கிரீடத்து டனும், பலவித வண்ணமணிகளை வைத்துத் தைத்த மேல்அங்கி கால் சட்டையுடனும், புஜக்குதுகளுடனும் சுமார் அரைமணி நேரத் திற்கு மேல் அசுரக்குரலில் அட்டகாசத்துடன் பாடல்களைப் பாட அதைத்தொடர்ந்து மற்றும் ஐந்தாறு நபர்கள் பிற்பாட்டுப்பாட அத்துடன் ஆர்மோனியம், மிருதங்கம்,



தாளங்கள் எல்லாம் சேர்ந்து போர்க் களப்பறை முழக்கங்கள் போல் கேட்போரின் காதுகள் செவிடுபட உச்சஸ்தாயியில் முழங்கியபின் திரை நீங்கும். அரிச்சந்திரனோ ராமனோ - கிரஷ்ணனோ எந்த வேடதாரியா யினும் காலில் சலங்கைகள் குலுங்க அட்ட காசமாகச் சுழன்று சுழன்று ஆடிக்கொண்டே பாடுவார்கள்.

நடிகன் முன்னும் பின்னும் சுழன்று செல்லும் போதெல்லாம் உடன் சென்று அவன் முகத்திற்கு வெளிச்சம்படும் வண்ணம் தீவட்டியை அல்லது காடா விளக்கைக் காட்டவேண்டும். இதில் சிறிது தவறினாலும், மேடையிலேயே ராமனே ரௌடியாகித் தீவட்டிக்காரனை நையப்புடைப்பான். வேறு எந்தத் தகுதியும் இல்லாதவர்கள்தான் தீவட்டிப்பிடிக்க வருவார்கள். அதனால்தான் இன்றும் திறமையற்றவர்களைத் தீவட்டித் தடியன் என்று இழித்துரைக்கும் வழக்கம் இருக்கின்றது போலும்.

பெரும்பாலும் இவர்கள் நடிக்கும் நாடகம் அரிச்சந்திரா, ராமாயணம், மகாபாரதம் தொடர்ந்து ஐந்து நாட்கள் பகுதி பகுதியாகப் பிரித்து நடித்துக் கடைசி நாள் பட்டாபிஷேகம் நடைபெறும்.

கிராம தேவதைகளுக்குக் காப்புக் கட்டுவதற்கு முன்னே இக்கலைஞர்கள் ஒப்பந்தம் செய்யப்படுவார்கள். தொகை கூடுதல், குறைவாக இருந்தாலும் ஆட்டுக் கடா, கோழிக்கறி, எண்ணெய் முழுக்கு எந்தெந்த நாளில் என்பதும், தினசரி கள்ளுக் குடங்கள் வழங்க வேண்டும் என்பதும் ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாக இருக்கும்.

ஒரு ஊரில் நாடகம் போடப் பாக்கு வாங்கிவிட்டால் அதாவது ஒப்பந்தம் செய்து விட்டால் அந்தத் தேதிகளில் வேறு ஊர் களுக்கு தொகை எத்தனை அதிகமாகக் கொடுப்பதாக அழைத்தாலும் பணத்திற்காக ஒப்பந்தத்திலிருந்து மாறவேமாட்டார்கள்.

இத்தெருக்கூத்துக் கலையில் மிகப் பெரும் புகழ்வாய்ந்த நட்சத்திரக் கலை ஞர்கள் பலர் அக்காலத்தில் இருந்தார்கள். ஒலிப்பெருக்கியே இல்லாத அந்தக் காலத்தில் கம்பீரமும் அழுத்தமும், அசுரத் தனமான ஆற்றல்மிக்க குரல் வலிமையும் கொண்ட அவர்களின் பாடல்கள் சுற்று வட்டாரத்தில் பல மைல்தூரங்களில் எதிரொலிக்கும்.

"இதயத்தை உலுக்கி ஈர்க்கும் இக் கலைஞர்களின் பாடல்களைக் கேட்பதற்காக நான் வயல் வரம்புகளையெல்லாம் தாண்டி பல மைல்களைக் கடந்து சென்று, மிகச் சிறு வயதிலே அவற்றைக் கண்டு களித் திருக்கின்றேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான தெருக்கூத்து இன்று பெரும்பாலும் அரசியல் செய்திகளை மக்க ளுக்கு தெரிவிக்கும் பிரச்சார நடவடிக் கைக்குப் பயன் தருகிறது. அதிக செல வில்லாது மக்களிடம் சென்று அவர்களுக்கு அறிவிக்கப்படும் அறிவிப்பாகவும் மக்களுக்கு மிக விரைவில் செய்தியினைக் கொடுக்கும். சாதனமாகவும் தெருக்கூத்தக்கள் இன்று காணப்படுகின்றன. இவ்வடிவத்தை மாண வர்கள் கற்கவேண்டிய தேவை கட்டாயமாக உள்ளது.

### இசை நாடகங்கள்:-

அழகியல் கலையாக மட்டு மல்லாது மானிடனின் பரிமாணங்களை உள்ளடக்கியதாகவும், சமுதாயத்தில் பண்பாட்டியலுக்கு தேவையான கலை வடிவ மாகவும் இசைநாடகங்கள் மிளிர்கின்றன. அன்றைய செம்மையான வாழ்க்கை முறை யிலும் ஒரு சில துவாரங்களும் இருந்ததை மறுக்க முடியாது. இவற்றை அடைப்பதற் காகவும், வாழ்க்கை முறையைப் பேணிப் பாதுகாப்பதற்காகவும், இசைநாடகம் மூல மான உபதேசங்கள் பெரும் தொண்டாற் றியுள்ளன. "உண்மை பேசல்", "கணவனே

கண்கண்ட தெய்வம்", "அன்னை தங்கை பாசம்", "அபச்சாரம் செய்தவனும் வீடு வந்தால் உபச்சாரம் செய்தல்", செல்வாக் குற்ற வயோதிபரிடம் அகப்படும் இளம் மனைவியின் குமுறல் - அதனால் ஏற்படும் உளவியல் தாக்கம் - அவற்றிலிருந்து விடுபட உபதேசம் "மறு தாரத் திருமணமும் சிற்றன்னையிடம் அகப்படும் குழந்தை களின் துயரமும் - அதனின்று விடுபட உபதேசம்" முதலிய அவலங்களை வெளிப் படுத்தும் சம்பவங்களையும், உபதேசங் களையும் கொண்டு இசை நாடகங்கள் சமூகத்தை வழிப்படுத்தி நின்றுள்ளன.

இன்று இக்கருத்துக்களை மேலும் அழுத்தி வைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நவீன வாழ்க்கை முறையில் சமுதாயத்தில் பொய்கள், களவுகள், சூது வாதுகள், சுயநலம் பேணல், சகோதரத்துவ மின்மை, தாய் தந்தையருக்குப் பணி வின்மை, பாசஉணர்வு இன்மை, நாட்டுப் பற்று, மொழிப்பற்று இன்மை, பெரியோரை மதிக்காமை, குருவுக்கு மதிப்புக் கொடாமை, பாலியல் துஸ்பிரயோகங்கள் போன்றவைகள் தொற்று நோயாகப் பரவிவருகின்றன. எனவே இன்றைய கருத்துக்களையும் அவலங் களினால் ஏற்படும் விளைவுகளையும் தெரி யப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கு இசைநாடக வடிவம் பெரிதும் உதவும்.

இசை நாடகங்கள் வெறுமனே உபதேசங்களைத் தெரிவிப்பதற்காக மட்டு மல்லாது நல்ல அழகியல் கலையாகவும் மக்கள் மனதைக் கவரக்கூடிய இராகங் களைக் கொண்ட பாடல்களும் நடிப்பும் உள்ளனவாகவும் மிளிர்கின்றன. இசை நாடகங்கள் கர்நாடக இராகங்களைக் கொண்டதாக இருந்தாலும் மக்களை மிகவும் வசீகரிக்கக்கூடிய முறையில் காதல், வீரம், சோகம் என்பவற்றையுடன் வெளிப்படுத்தப்படுவனவாகவும் திகழ்கின்றன.



**கிராமிய நடனங்கள் (கலைகள்):-**

கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், குதிரையாட்டம், சிலம்பாட்டம், வேடராட்டம், பேயாட்டம், என்ற பல ஆட்ட வகைகளைக் குறிப்பிட்டிருந்தேன். இவ்வாட்டங்கள் யாவும் இந்து ஆலயங்க ளோடு மிகவும் தொடர்புடையன. ஆலயங்கள் கலைகளை வளர்க்கும் மையமாக இருந்தனவெனக் குறிப்பிட்டிருந்தேன். இந்து மத நம்பிக்கையை கலைகள் மூலம் நிகழ்த்தி நன்றிக் கடனைக் கழித்தார்கள். இதை நேர்த்திக் கடனெனக் கூறுவர். எனவே இந்து சமயத் திருவிழாக்கள், சூரன் போர் போன்ற சமய விழாக்கள் மூலமாக இக்கலைகள் அரங்கேறியது. கலைஞர் களும், மரபுக் கலைகளுடன் பின்னிப் பிணைந்திருந்தனர். எனவே மரபுக் கலைகள் வளர்க்கப்படவில்லை. தானாகவே வளர்ந்து வந்தன இக்கலைகள் மக்களிடம் உறவு களை ஏற்படுத்தின. ஓய்வு நேரங்களில் கலைகளில் ஈடுபடவும் தமது மனத்தை தெளிவான சிந்தனையுடன் வைத்திருக்கவும் வழிகாட்டின. கிராமியக்கலைகள் ஒவ் வொன்றையும் பற்றிய விரிவான விளக் கத்தை வேறொரு சந்தர்ப்பத்தில் வெளிப் படுத்த எண்ணுகிறேன்.

**செந்நெறிக் கலையான பரதநாட்டியம்:-**

பரதநாட்டியக் கலைத்திட்டம் தமிழர் களின் வேரான பாரம்பரியக் கலைகளான பாமரர் கலைகளின் வளர்ச்சிக்கு பெரிதும்

உதவவில்லை இக் கலைகளைப் பயின்றிருந்தவர்கள், அடிமட்டத்து வாழ்க்கை நடத்தும் மக்களாகவே இருந்தனர். இக்கலைகளை எல்லோராலும் ஆற்றுகை செய்ய முடியாததும் உண்மையாகும். இக் கலைகளின் வளர்ச்சியைத் தடை செய்தவர்களில் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதியுயர் சாதியினர் இக் கலைகளை சாதிக்குள் அமுக்கியதுடன் இக்கலைகளைப் பேணுவோரைக் குறைந்த சாதியினரெனத் தாழ்த்தி வைத்துவிட்டனர். உயர் சாதியினரோ என்பவர்கள் செந்நெறிக் கலையான கர்நாடக சங்கீதத்தையும், பரதநாட்டிய அரங்கேற்றத்தையும் தமது குடும்ப கௌரவம் கருதித் தமதாக்கிக் கொண்டனர்.

பரத நாட்டியத்திற்கே தாய்நாடான இந்தியக் கலை வரலாற்றை நோக்கினால் பண்பாட்டு வளர்ச்சியின் மாற்றத்தை அறிந்து கொள்ளமுடியும். கவிஞர் கு.சா. கிருஸ்ண மூர்த்தி எழுதிய "தமிழ்நாடக வரலாறு" நூலிலிருந்து, (தமிழ்நாட்டின்) இசை, நாட்டியம், நாடகம் போன்ற கவின் கலைகள் அந்நியர்களின் ஆட்சியாலும், பிற மதங்களின் தாக்குதல் களாலும், வேற்று மொழிக்கலாச்சாரக் கலப்பினாலும், தமக்கே உரிய தனித்தன்மையை இழக்க நேர்ந்த போதுதான் நமது அருங்கலைகளாகிய இசைக் கலையும், நாட்டியக்கலையும், நாடகக் கலையும், ஆண்டவனின் ஆலயங்களில் அடைக்கலம் புகுந்தன.

இசைக் கலைஞர்கள், நாட்டிய நடிகைகள், நாடக நடிகர்கள், நாதஸ்வர தவில் கலைஞர்கள், ஆகியோருக்கு கோயில் படித்தரங்களும், மானியங்களும் நிரந்தரமாக வழங்கப்பெற்றன.

இக்கோயில் கலைஞர்கள் எல்லோருமே இறைவனுக்கு கலைமூலம் தொண்டு செய்வதற்கென்றே தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்கள் என்று சொல்வதுதான் வழக்கம்.

அதிலும் குறிப்பாக, ஆடற் கலைக்கென்று தேர்ந்தெடுக்கப்பெறும் அழகும், இளமையும், ஆடற்கலைத் தேர்ச்சியும் உள்ள நங்கையர்களை கோயில் தாசியென்று சிறப்புக்குரியவர்களாகத் தேர்ந்தெடுத்து, அவர்களின் அழகு, இளமை, கலைத்திறம் அனைத்தையும் ஆண்டவனுக்கே அர்ப்பணம் செய்து விட்டவர்கள் என்பதற்கு அடையாளமாக அவர்களை இறைவனுக்கே உரிமையாக்கி, அதாவது மனைவியாக்கி பொட்டுக் கட்டுதல் எனும் ஒரு சடங்கை நடத்தினர். அதாவது இறைவனுக்கும், அவர்களுக்கும் திருமணம் செய்து வைத்து ஆயுள் முழுவதும் அவள் தெய்வத்தொண்டுக்கே தாரைவார்த்துக் கொடுக்கப்படுவாள்.

இவ்வாறான நல்ல நோக்கில் கலையை கோயில்கள் மூலம் வளர்த்தெடுக்க முயற்சி செய்யப்பட்டன. ஆனால் நாளடைவில் நோக்கம் நிறைவேறவில்லை. அதுபற்றி கிருஸ்ணமூர்த்தி கூறுகின்றார்.

"நாளடைவில் இதற்கென்று தாசி குலமென்று ஒரு ஜாதியையே உண்டாக்கி விட்ட கொடுமையையும் இத் தமிழகம் கண்டது. .................. இறைவனின் திருச்சந்நிதிக்கு முன்பு ஆத்மார்த்தமாக தனது இதயத்தையே நிவே தனம் செய்யும் புனிதப் பணிக்கென்று தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட அப்புனிதவதிகளை, அக்காலக் கோயிற் பூனைகளாகவும் பெருச்சாளிகளாகவும் இருந்த மடாதிபதிகள் முதல் அர்ச்சகர்கள், அறங்காவலர்கள், ஆள் பலமும், பணப லமும் உள்ள அந்தஸ்து மிக்க செல்வச் சீமான்கள் ஆகியோர் தங்களின் போகப்பொருளாகவும் ஆசை நாயகியாகவும் ஆக்கிக்கொண்ட அநீதியை என்னவென்று சொல்வது தெய்வத்திற்கு நிவேதனம் செய்த திவ்யபிரசாதத்தை

தெருநாய்கள் பறித்துக் கொண்ட செயலுக் குத்தான் இவற்றை ஒப்பிடமுடியும். தேவரடி யார்கள், தேவதாசிகள் என்னும் பெருமைக் குரிய பெயரும் தெய்வீகக்கலையும் இத்த கைய இழிவுக்கும் சீரழிவுக்கும் தாழ்ந்து விட்டதை நினைத்து வருந்தாமல் இருக்க முடியவில்லை.

ஒரு ஜாதிக்கே உரியதாக இருந்த கலை இன்று உயர் வட்டாரங்களிலெல்லாம் விரும்பிப் போற்றிப் பயிலும் கலையாகப் பரவலாக வளர்க்கப்படுவதைக் காண்கின் றோம்" என கிருஸ்ணமூர்த்தி கூறுகின்றார்.

எனவே கால மாற்றத்திற்கேற்ப, சமுதாய வளர்ச்சிக்கேற்ப யதார்த்த கருத் துக்கள் ஏற்புடையதாக, உளமாற்றங்கள் ஏற்பட்டு உண்மைகள் வெளிப்படுகின்றன. அந்த வகையில் தெய்வீகக்கலையான பரதநாட்டியம் சிலப்பதிகார காலத்தில் செழுமை பெற்று உலகம் போற்றும் கலையாக இருந்தது. ஆதனால் தமிழ கத்தில் களப்பிரர், பல்லவர், சாளுக்கியர், ஆந்திரர், மராத்தியர், மொகலாயர், போர்த்துக்கீசர், பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோரின் ஆசியப் படையெடுப்புக்களும், சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறீஸ்தவம் ஆகிய மதப் படையெடுப்புக்களும், சமஸ்கிருதம், பாளி, தெலுங்கு, கன்னடம், மராத்தி, உருது, ஆங்கிலம் ஆகிய பிறமொழி ஊடுருவல் களுக்கும் தமிழர்களின் கலை இலக்கிய கலாசாரம் சிதைவுறக் காரணமாயின. ஆனால் படிப்படியாக மக்களிடம் ஏற்பட்ட அறிவு வளர்ச்சியாலும் மனித நேய உணர்வு களாலும் உளமாற்றங்களினாலும் கலைகள் அழியாது பாதுகாக் கப்பட்டு விட்டன.

தமிழகத்தில் நடன கலாசேத் திரத்தை ஆரம்பித்த ருக்மணி தனது பேட்டி யில் முதன்முதல் இரண்டு மாணவர்கள் மட்டுமே படிக்க வந்ததாகக் கூறினார். பரதநாட்டியத்தைக் கற்பது இழிவாகக் கருதப்பட்ட காலத்தைக் கடந்து இன்று



ருக்மணி ஆரம்பித்து வைத்த நடன கலா சேத்திரத்தில் பிரவேசம் பெறுதல் மிகவும் கஸ்டமாகவுள்ளது.

மேற்படி நிகழ்வுகளை நாம் பார்க்கும் போது பின்வரும் உண்மைகள் புலப்படுகின்றன.

"பரத நாட்டியம் போன்ற கலைகள் கோயிலில் ஆடப்பட்டதினாலும், தேவதாசி களினால் ஆடப்பட்டதினாலும், அதைப் பயில பின்னின்ற மாணவர்கள், இன்று தமிழகத்தில் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்ட தினாலும், மண்டபங்களில் அரங்கேற்றம் செய்து கௌரவிக்கப்பட்டதினாலும் குடும்ப கௌரவமாக ஏற்றும் பலரும் பயின்றதினால் தமிழகம் பரத நாட்டியத்திற்கு பெயர்போன அறிவாளிகளையும். நாட்டியக்கலை மாணி களையும் கொண்டு விளங்குகின்றது.

கலை என்பது மன நிறைவைத் தரும் சாதனம். பேராசிரியர் கா. சிவத்தம்பி "நாடகம் என்னும் கலை" என்ற கட்டுரையில்

பின்வருமாறு கூறுகின்றார்: "கலை என்பது அதனைப் பயில்வோருக்கும் நுகர்வோருக்கும் மன நிறைவைத் தருகின்ற ஒரு திறன் ஆகும். இந்த மனநிறைவு அக்கலை வடிவை நுகர்வோரிடத்தே ஏற்படுத்தும் கற்பனைப் பிரிவு, அழகியல் திருப்தியுணர்வு ஆகிய வற்றிலே காணப்படும்.

எனவே கலையானது மனிதனைச் செம்மைப்படுத்துவது என்று கூறமுடியும். இக்கலைகளில் பாமரர் போற்றும் கலை வடிவங்கள் தெய்வீகக் கலைகளாக மிளிர்கி றது. ஆனால் இன்று செந்நெறிக் கலைகளாக வகைப்படுத்திக் கொண்ட பரத நாட்டியமும் கர்நாடக சங்கீதமும் பாரம்பரிய கலைகள் என்ற பெயரோடு உயர்வு நிலையில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தனித்துறையாக விளங்குகின்றன. இப்பாட நெறிகளைக் கற்போர் வாத்தியங்களில் சில வற்றை பாமரர் கலைகளுக்குரியதெனக் கூறி வாசிக்க வெட்கப்படுகின்றார்கள். பாரம் பரிய கலைகளில் விருப்பங்கொண்ட சில மாணவர்கள் இக்கலையை பேண விரும்பி னாலும் ஏனைய மாணவர்களின் ஏளனத் திற்கு ஆட்பட்டு பயிலுவதை நிறுத்திக்கொள் கின்றார்கள். சில விரிவுரையாளர்களும் மாணவர்களை பாரம்பரிய கலைகளையும், நாட் டார் இசையையும் பயிலவிடாது தடுக் கின்றார்கள். பல்கலைக்கழக கர்நாடக சங்கீத ஆசிரியர்கள் நாட்டார் பாடல்களை கர்நாடக சங்கீத இராகத்திற்கு உட்படுத்தி நாட்டார் பாடல்களின் மூலவேரை அறுக் கின்றார்கள்.

பல்கலைக்கழகத்தில் கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், அழகியல் ஆகிய பாடத்துறை சார்ந்த மாணவர்களை பாமரர் கலைகள் பற்றியும் கலைஞர்கள் பற்றியும் கட்டுரை சமர்ப்பிக்குமாறு பரீட்சைத் திட்டத்தில் சேர்ந்துள்ளார்கள். இம்மாணவர் களுக்கு இத்துறை சம்பந்தமான எந்த அறிவுமில்லாது கட்டுரைக்கான பொருள் தேடி கலைஞர்களிடம் பேட்டிக்குச் செல்கின் றார்கள். துறைசார்ந்த கலைஞரிடமே விடயத் திற்கான விபரத்தையும் அதற்குரிய கேள்வி களையும் அமைத்துத்தரும்படி கேட் கிறார்கள். அவர்களுக்கு இவ்விடயம் பற்றிய எந்த விளக்கமும் இல்லாமையால் தவிக் கிறார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் பல்கலைக்கழகத்தில் ஒரு சில நிகழ்வுக ளுக்காக மரபுக் கலைகளைக் கொண்ட நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஆற்றுகை நடத்திவிட்டு, பல்கலைக் கழகத்திலிலுள்ள தமிழ், சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய துறைகளில் பாரம்பரிய கலைகளின் நிகழ்வுகள், கற்பித்தல் இடம்பெறுகிறது என்று கூறி கல்விமான்கள் தப்பித்து விடுகிறார்கள். தமிழ் துறையில் நாட்டார் இலக்கியம் ஒரு பகுதியாக உண்டு. ஆனால் நாட்டார் கலைகள் எத்துறையிலும் செயல் முறையாக இடம்பெறுவதில்லை. அது கலைத்திட்டத்திலும் இல்லை.

பாடசாலைகளில் ஆறாம் ஆண்டிலிருந்து சங்கீத பாடத்தில் நாட்டார் பாடல் எனும் பகுதி பாடத்திட்டத்தில் உண்டு. ஆனால் பெரும்பான்மையான மாணவர்கள் கர்நாடக சங்கீதராகத்திலேயே பாடல் களைப் பாடுவதை காணக்கூடியதாக இருக்கின்றது. பிள்ளைகள் மூலவேரோடு பாடினாலும் கர்நாடக சங்கீத ஆசிரியர்கள் கர்நாடக இசைக்குள் அப்பிள்ளைகளை கொண்டு சென்றுவிடுவார்கள். வளமான நாட்டார் பாடல்களை மூலவேர் அறாமல் இந்நாட்டார் இசையிலே பயிற்றுவிக்கத்தக்க ஆசிரியர்களும் இல்லை.

எனவே நாட்டுப்புறவியலின் முக்கி யத்துவத்தையும் நாட்டுப்புறக் கலையின் செழுமையையும் இவற்றின் கட்டாயத் தேவையையும் தற்பொழுதைய நிலைப் பாட்டையும் இங்கு பாரத்தோம். இந் நிலையில் நாட்டுப்புறப் பண்பாட்டுக்கலை கலாசார தமிழ் தேசிய சொத்தினை நிரந்தர

மாகப் பேண பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

**ஆலோசனைகள்:-**

01. தரம் 5 வகுப்புக்குக் கீழ் "அழகெழல்" என்னும் பாடத்தை உருவாக்கி, அம்மாணவர்களுக்கு பாமரர் கலைகளின் செய்முறையையும், நாட்டாரிசையையும் பயிற்சி பெறக்கூடிய அத்திவாரம் இடப்பட்ட கலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். (எனது அனுபவத்தில் 5ஆம் ஆண்டுக்குட்பட்ட பிள்ளைகள் மிகவும் சிறப்பாக கூத்து, கோலாட்டம், கும்மி, கரகம், காவடி ஆற்றுகைப் படுத்துவதை பல மேடைகளில் சிறப்பாக ஆற்றுகை செய்வதைக் கண்டு உடல் புல்லரிக்க வியந்தேன்.)

02. ஆறாம் ஆண்டிலிருந்து நாட்டுப்புறவியலை ஒரு பாடமாகப் பாடத்திட்டம் வகுத்து அமுல்படுத்த ஆவன செய்ய வேண்டும். (செய்முறை, அறிமுறை ஆகிய இடம்பெறக்கூடியதாக இருக்கவேண்டும்.

03. வடமாகாண சங்கீத சபையில் ஆசிரியர் தரம் வரை பாடத்திட்டம் வகுத்து பரீட்சை செய்து பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் "ஆசிரியர் தர பத்திரத்துடன்" ஆசிரியர் பதவி வழங்க அரசிடம் வற்புறுத்த வேண்டும்.

04. பாடசாலையில் கற்பிக்கும் சங்கீத ஆசிரியர்களுக்கும் துறை சார்ந்த அனுபவமுள்ள ஆசிரியர்களுக்கும் பயிற்சிப் பட்டறை நடாத்தி பயிற்றுவிக்க வேண்டும்.

05. பல்கலைக்கழகத்தில் நாட்டுப்புறவியலுக்கு தனித்துறை அமைக்க வேண்டும். (செயல்முறை இடம்பெற வேண்டும்.)



06. துறைசேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கி தமிழகப் பல்கலைக்கழகங்களினால் பல்கலைக்கழகம் நாட்டுப்புறக்கலை சம்பந்தமான செய்முறை, அறிமுறைப் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

07. கல்வித் தகைமை பாராது ஆற்றுகைத் திறமையை மூலமாக வைத்து கூத்து, இசை நாடகம் என்பவற்றில் அனுபவம் வாய்ந்த அண்ணாவிமார்களைக் கொண்டு பகுதிநேர விரிவுரையாளர்களாக நியமித்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும்.

08. தமிழகப் பல்கலைக்கழகத்தில் "நாட்டுப்புறவியல்" துறையில் பட்டம் பெற்றவர்களில் சிலரை ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளர்க

நியமித்து அவர்களிடமிருந்து பயனைப் பெறலாம்.

09. தமிழகத்திலிருந்து அல்லது தமிழ் பல்கலைக்கழகத்திலிருந்து கலை வடிவங்களுக்கான தேர்ச்சி பெற்ற நடனக்குழுக்களை அழைத்து அவர்களிடம் பயிற்சி பெறுதல்.

10. பல்கலைக்கழகத்தில் நடனத்து றையிலுள்ள மாணவர்களுக்கு பாமரக்கலை வடிவங்களின் (கலப்பற்ற) செய்முறைப் பரீட்சை வினாத்தாள் தனியாக இடம்பெறக்கூடியதாக பாடத் திட்டத்தை அமைத்தல் வேண்டும்.

11. பல்கலைக்கழகத்தில் கர்நாடக சங்கீதத் துறையிலுள்ள மாணவர் களுக்கு நாட்டார் இசை (கலப்பற்ற பாடல்கள்) சம்புந்தமான செய்முறை வினாத்தாள் தனியாக இடம்பெறக் கூடியதாக பாடத்திட்டம் அமைக்க வேண்டும்.

இவ்வாறான திட்டங்களை முழு மனத்துடன் நிறைவேற்றினால் இலக்கை அடையலாம் என எதிர்பார்க்கலாம். திட்டங்கள் நிறைவேற்றப்படும் பொழுது கல்விச் சமூகத்திலும் பல்கலைக்கழகத்திலும் அங்கீகாரம் கிடைக்கும். மாணவர்கள் வேற்று பேதங்கள் விட்டு கலைபயில ஆர்வம் கொள் வார்கள். அடிமட்ட மக்களின் பாரம்பரிய கலை தமிழ் தேசியக் கலையாக உரு வாகும். பட்டப்படிப்புக்கு அங்கீகாரம் கிடைத் தால் படித்தவர், படியாதவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், உயர்சாதி, தாழ்சாதி என வேறு பாடற்று "எல்லோரும் கற்கும் கல்வி" யாக மாறும்.

இக்கட்டுரையில் சில விடயங்களை யதார்த்தபூர்வமாக கூறியிருக்கின்றேன். யாரையும் தனிப்பட்டமுறையில் குறை, குற்றம் சொல்லவில்லை. இக்கலையானது அரச அங்கீகாரமும் பல்கலைக்கழக அந்தஸ்தும் பெறாவிட்டால் இக்கலையில் ஒரு சிலரைத்தவிர பெரும்பாலானோர் ஈடுபட மாட்டார்கள் என்பதை ஆணித்தரமாக கூற முடியும்.

சிலர் பாரம்பரிய கல்லூரி ஒன்றை உருவாக்குவதன் மூலம் இக்கலையை வளர்த்தெடுக்கலாம் என ஆலோசனை தெரிவிக்கின்றார்கள். இக்கல்லூரியில் படிப்பதன் மூலம் தொழில் வாய்ப்புக் கிடைப் பதாயின் மாணவர்கள் இணைந்து படிப் பார்கள் என எதிர்பார்க்கலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தை வழங்கக்கூடிய அரசு ஒன்று அமைந்தால் அது நிதர்சன மாகலாம். ஒவ்வாத வேளையில் இக்கல்லூரி அமைந் தாலும் மாணவர்கள் கற்பதற்கு பின்நிற் பார்கள் என்பது உறுதி.

எனவே கல்வித் திட்டத்தில் நாட்டுப் புறவியலை கற்பிக்கவும், பல்கலைக்கழ கத்தில் "நாட்டுப்புறவியலை" துறையாக உருவாக்கவும், கல்விமான்களின் அழுத்தம் கொடுக்கப்பட வேண்டுமென்பதே நாட்டுப் புற கலை கலாசார பண்பாட்டில் அக்கறை கொண்ட அனைவரதும் விருப்பமாகும்.

ஃ

*வாழ்வின் பெரும் பகுதியைக் கற்றலிற் கரைத்து, வாழச் சொல்லித்தராத, வாழ்க்கையைச் சொல்லித் தராத கல்வியைக் கற்றுக் கொடுக்க முயலாதே!*

- யாரோ -

# பரிகாரக் கற்பித்தல்

## REMEDIAL TEACHING

மாணவர்களிடம் அற்றுப்போன தன்னம்பிக்கையையும் சுய ஊக்கலையும் மீண்டும் ஏற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டு வழங்கப்படும் ஒரு விசேடமான கற்றலுதவியே பரிகாரக் கற்பித்தலாகும். வேறு வகையில் சொல்வதாயின் கற்றலிற் பின்னிற்கும் மாணவர்களுக்கு அல்லது கற்றலின் போது பல்வேறு இடர்களையும், சிரமங்களையும் எதிர்நோக்கும் மாணவர்களுக்கு சம்பிரதாய பூர்வமாக மேற்கொள்ளப்பட்டுவரும் பொது வான கற்றல் கற்பித்தல் கருமத் தொட ருக்கு, மேலதிகமாக வழங்கப்படும் இலகு வான படிமுறைகளையும், தொடர்ச்சியான மீளவலியுறுத்தல்களையும் கொண்ட ஒரு கற்பித்தல் நுட்பம் பரிகாரக் கற்பித்தல் எனலாம்.

பரிகாரக் கற்பித்தலானது மாண வர்கள் எவ்வெவ் விடயங்களைத் தெளிவாக அறிந்து வைத்துள்ளார்கள் எவ்வெவ்விடயங் களில் கற்றல் தேர்ச்சியினை அடைந்துள் ளார்கள். என்பதில் தொடங்கி அவர்கள் எவ்வெவ் விடயங்களை அறிந்து கொள்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள் என்பது பற்றிய விளக்கங்கள் வரையான ஆய்வுகளின் தொடரில் பரிகாரக் கற்பித்தற் செயற்பாடுகள் அமைகின்றதெனலாம்.

### பரிகாரக் கற்பித்தலும், பொதுவான கற்பித்தலும்:-

பொதுவாக நாம் வகுப்பறைகளில் மேற்கொள்ளும் கற்பித்தலானது "கற்பித்தல் → மதிப்பீடு செய்தல் → கற்பித்தல்" என்ற படிமுறைகளின் ஊடாக நடைபெறு கின்றது. ஆனால் பரிகாரக் கற்பித்தலானது "மதிப்பீடு → கற்பித்தல் → மீள மதிப்பீடு" என்ற படிமுறைகளின் வழி இடம் பெறுகின்ற தெனலாம்.

பரிகாரக் கற்பித்தலில் மாணவர்கள் அறிந்து வைத்துள்ள விடயங்கள் எவை, அவர்கள் அறியத்தவறிய விடயங்கள் எவை, என முதலில் மதிப்பீடு மேற்கொள்ளப் படுகின்றது. பின் இம்மதிப்பீட்டின் அடிப் படையில் கற்பித்தற் பொருள் அல்லது கற்க வேண்டிய விடயங்கள் செயற்பாடுகள் என்பன திட்டமிடப்படுகின்றன. பின்னர் கற்பித்தல் செயற்பாடு இடம்பெறுகின்றது. கற்பித்தலுக்குப் பின் இடம்பெறும் மதிப் பீடானது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட புதிய கற்பித்தலானது மாணவர்களின் நடத்தையில் ஏற்படுத்தியுள்ள செல்வாக்குப் பற்றி அறிவதற்காகவே மேற்கொள்ளப்படு கின்றது. இங்கு மாணவன் அறியத்தவறிய விடயங்களுக்கே கூடுதல் முக்கியத்துவம் தரப்படுகின்றது.

### பரிகாரக்கற்பித்தலின் நோக்கமும் பொறுப்பும்:-

ஒரு வகுப்பறையில் உள்ள மாண வர்கள் வெவ்வேறு வகையான திறன்க ளையும் உளத்தன்மைகளையும் கொண்டி ருக்கின்றனர். அவர்கள் வெவ்வேறு மட்டங் களிலும் வெவ்வேறு தன்மைகளிலும் தமது அடைவினை வெளிக்காட்டுகின்றனர்.

வெவ்வேறு மட்டங்களில் தமது அடைவை வெளிப்படுத்தும் மாணவர்களைச்

சமமானதொரு மட்டத்திற்கு கொண்டுவர முயற்சிப்பதற்கு மேலாக அந்த மாணவர்களின் தேவைகளையும், இயல்பையும் கருத்திற்கொண்டு அதற்கு ஏற்ற விதத்தில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்வதே பரிகாரக் கற்பித்தலின் நோக்கமாகும்.

பரிகாரக் கற்பித்தலின் பொறுப்பானது பின்வருமாறு அமைகின்றது. மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளை மாணவருக்குச் சார்பாக உச்ச அளவிற்கு விருத்தி செய்வதற்காக சுற்றாடலை கற்றலுக்கு ஏற்றவகையில் ஒழுங்கமைப்பதும், அவ்வாறு ஒழுங்கமைக்கும்போது தோன்றும் தடைகளை நீக்குவதும் பரிகாரக் கற்பித்தல் தொடரில் முதன்மையானதாகும்.

## பரிகாரக் கற்பித்தல் செயற்பாட்டின் தன்மையும் கொள்கைகளும்:~

பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளும் போது பரிகாரக்கற்பித்தலின் தன்மை தொடர்பாகவும் அது தொடர்பான கொள்கைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

பரிகாரக் கற்பித்தல் என்பது மாணவர்களை திறமையானவர்களெனவும், கற்றலின் பின்னிற்பவர்கள் எனவும் பிரித்தொதுக்கும் செயற்பாடல்ல. மாறாக ஒவ்வொரு மாணவனையும் இனங்கண்டு வகுப்பறையில் ஓர் அங்கத்தவன் என்ற வகையில் ஒவ்வொரு மாணவனினதும் உள்ளார்ந்த திறன்களையும் தனிச் சிறப்பையும் அறிந்து அதற்கேற்ப நடத்தப்படும் ஒரு விசேட கற்பித்தற் செயற்பாடாகும். அடுத்து பரிகாரக் கற்பித்தல் எனப்படுவது விசேடமாகத் தயாரிக்கப்பட்ட திட்டத்தோடு ஊக்குவிப்பு உத்திகளையும் ஒருங்கே கொண்ட ஒரு சிறந்த செயற்பாடாகும். இது மாணவர்களிடம் அற்றுப்போன தன்னம்பிக்கையையும், தன்மானத்தையும், சுய ஊக்கலையும் மீண்டும் பிறப்பிப்பதொன்றாகவும் உள்ளது. அத்துடன் சம வயதுக் குழுவினரிடையே தன்னம்பிக்கையுடனும் கட்டுப்பாடின்றியும் தயக்கமின்றிப் பழகுவதற்கும் உதவுவதாக அமைகின்றது.

பரிகாரக் கற்பித்தல் என்பது மாணவர்களிடத்தே காணப்படும் எல்லாக் குறைகளையும் ஒரே தடவையில் பரிகாரம் காணமுற்படும் ஒரு செயற்பாடல்ல. மாறாக மிக நெருங்கியதும் மிக முக்கியமானதுமான அம்சங்களுக்கே பொருத்தமானதாகும். அல்லது அவற்றிற்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு செயற்பாடு இது என்பது கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

பொதுவாக கற்றலில் பின்னிற்கும் மாணவருக்கே பரிகாரக் கற்பித்தல் பொருத்தமானதாகும். கற்றலில் பின்னிற்கும் மாணவர்கள் எனப்படுவோர் அவர் கற்க வேண்டிய தரத்தின் தேர்ச்சி மட்டத்திற்கு கீழானதரத்தின் தேர்ச்சி மட்டத்தினை கொண்டிருப்பவர் ஆவார். மீத்திறன் மாணவர்களும் சில சந்தர்ப்பங்களிற் சில விடயங்களில் கற்றல் இடர்பாடுகளைக் கொண்டிருப்பின் அவர்களுக்கும் பரிகாரக் கற்பித்தல் அவசியமானதாகும்.

பொதுவாக நாம் வகுப்பறைகளில் மேற்கொள்ளும் கற்பித்தலைப்போன்று படிப்படியாக மாணவனைப் பாட விதானத்தின் சிக்கலான எண்ணக்கருக்களின்பால் கொண்டு செல்லும் செயற்பாட்டையே பரிகாரக் கற்பித்தல் கொண்டிருக்கின்றன. ஆனாலும் பரிகாரக் கற்பித்தலின் படிமுறைகள் பொதுவான கற்பித்தலின் படிமுறைகளைப் போன்று துரிதமானதாக அமையமாட்டாது. மாறாக மிகவும் மெதுவானதாகவும் ஒவ்வொரு படியும் மதிப்பிடப்பட்டு மீண்டும் மீண்டும் இடம் பெறுவதாகவும் அமையும்.

**கதிரேசன் சுவர்ணர்ராஜா**
விரிவுரையாளர்,
கல்வியியற் கல்லூரி, வவுனியா

### பரிகாரக் கற்பித்தலின் படிமுறைகள்.

பரிகாரக் கற்பித்தலானது மிகவும் நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டு செயற்படுத்தி மதிப்பிடவேண்டிய ஒன்றாகும். இக்கற்பித்தல் நுட்பமானது பல்வேறு படிமுறைகளின் ஊடாக செல்வதாகும். பரிகாரக் கற்பித்தலின் படிமுறைகளைப் பின்வருமாறு அமைத்துக் கொள்ளலாம்.

படி1. கற்றலில் குறைபாடுகளை வெளிக் காட்டும் மாணவர்களை இனங் காணல் வேண்டும். அத்துடன் மாணவர்களின் கற்றல் குறைபாடு களையும் இனங்கண்டு கொள்ளல் வேண்டும்.

படி2. இனங்காணப்பட்ட குறைபாடுகளின் தன்மைக்கு ஏற்ப மாணவர்களைக் குழுக்களாக வகுத்தல்வேண்டும்.

படி3. வகுக்கப்பட்ட குறைபாடுகளின் தன்மைக்கு ஏற்ப மாணவர்களைக் குழுக்களாக வகுத்தல் வேண்டும்.

படி4. மாணவர்களின் கற்றலை இலகு வாக்கும்பொருட்டு மாணவர் களிடத்தே ஊக்கலை ஏற்படுத்தும் முகமாகவும் கற்றற்றுணைகளைத் தயாரித்து அவற்றைப் பயன்படுத்தி கற்பித்தல் வேண்டும். கற்பித்த லானது மாணவனின் குறைபாடு நிவர்த்தி ஆகும் வரை எளிய மட்டத் திலிருந்து எதிர்பார்ப்பு மட்டம் வரை படிப்படியாக பாடங்களைச் சமர்ப்பிப் பதாகவும் குறைபாடுகளை அதிக மாக வெளிக்காட்டும் மாணவர் களுக்கு மேலதிகமான உதவிகளைப் புரிவதாகவும் அமைதல் வேண்டும்.

படி.5. ஒரு தடவை சமர்ப்பிக்கப்பட்ட பாடத்தையோ செயற்பாட்டையோ தேவைக்கு ஏற்ப மீண்டும் மீண்டும் சமர்ப்பித்தல் வேண்டும்.

படி6. ஒவ்வொரு கட்டத்திலும் மாணவர் களை மதிப்பீடு செய்து மதிப்பீட்டில் இருந்துபெறும் பின்னூட்டலின் அடிப்படையில் மீண்டும் கற்பித்தலை தொடருதல் வேண்டும்.

### பரிகாரக் கற்பித்தலும் ஆசிரியரும்:-

பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் பரிகாரம் பெறும் மாணவரிடையே அன்னியோன்னிய தொடர்பையும் நம்பிக் கையையும் நல்லெண்ணத்தையும் வளர்ப் பவராய் இருத்தல் வேண்டும். அப்போது தான் பரிகாரக் கற்பித்தல் முழுமையடையும் பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் பல திறன்களை வளர்த்துக்கொள்ளல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் பரிகாரம் பெறும் மாணவர்களின் அண்மைச் சுற்றாடலில் எப்போதும் சஞ்சரிக் கின்றவராகவும், நிதமும் இலகுவாகவும், நட்புடனும் சந்திக்கக் கூடிய ஒருவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறான தன்மை மாணவர்களின் ஊக்கலை அதிகரித்து கற்றலின் மீதான விருப்பத்தை உயர்த்தும்.

ஆசிரியர் பரிகாரக் கற்பித்தல் தொடர்பான பயிற்சிகளைப்பெற விருப்ப முள்ளவராகவும், அது தொடர்பான தேடலைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் பரிகாரக் கற்பித்தல் தொடர்பான செயற்தொடர் ஆய்வில் நாட்டம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆசிரியர் பரிகாரம் பெறும் மாணவர் களிடம் கருணையுள்ளமும், நற்குணமும் பொறுமையும் கொண்டவராக இருத்தல் வேண்டும். பரிகாரம் பெறுபவரை குறைவாக மதிக்காமல் பண்புடன் கருமமாற்றும் தன்மை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

ஆசிரியர் பரிகாரக் கற்பித்தல் தொடர்பான முடிவுகளையும், தீர்மானங்

களையும் துரிதமாகவும், குறுகிய மனப்பான்மையுடனும், மேற்கொள்பவராய் இருத்தல் கூடாது. மிகவும் நிதானமாகவும், பாரபட்சமின்றியும், விரிந்த நோக்குடனும் பரிகாரக் கற்பித்தல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளல் வேண்டும். விரிந்த நோக்கற்ற அவசரமான முடிவுகள் மாணவர்களின் கற்றலில் மேலும் மேலும் இடர்களை ஏற்படுத்தும் அபாயத்தை தோற்றுவிக்கலாம்.

திடமான மனத்துடனும், தைரியத்துடனும் நீண்டகாலப் பொறுமையுடனும், கடமையாற்றுதல் பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடுபவர் கொண்டிருக்கவேண்டிய முக்கிய பண்பாகும். அவசரப்படாமல் பொறுமையுடன் நம்பிக்கையிழக்காமல் எதிர்பார்த்த இலக்கை பரிகாரம் பெறுபவர் எய்தக்கூடிய வகையில் தொடர்ச்சியாகக் கடமையாற்ற வேண்டும். பொறுமையிழந்தும் நம்பிக்கையிழந்தும் கற்பித்தலிற் ஈடுபட்டால் எதிர்பார்த்த இலக்கை பரிகாரக் கற்பித்தலின் மூலம் அடைதல் முடியாது என்பதை கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

ஆசிரியர் தன்னிடத்தே பரிகாரம் பெறும் ஒவ்வொரு மாணவர் களிடமும் ஏற்படக் கூடும் எனக் கருதும் ஒவ்வொரு நடத்தைசார் மாற்றங்களையும் தொடர்ச்சியாக அவதானித்து பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பரிகாரக் கற்பித்தலில் கிடைக்கப் பெறும் வெற்றியையும் தோல்வியையும் முதலாவதாக அனுபவிப்பவர் அதனைப் பிரயோகிக்கும் ஆசிரியரே. ஆகவே தொடர்ச்சியாகப் பதிவுசெய்து கொள்வதன் ஊடாகவே கற்றலில் ஏற்படும் சிரமங்களையும் இடர்களையும் அதற்கான காரணிகளையும் தெளிவாக இனங்கண்டு மாணவர்களை தொடர்ச்சியாக ஊக்குவிக்க முடியும்.

பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடுத்தப்படும் கற்றல் துணைச் சாதனங்களும் உபகரணங்களும் திருத்தமாகவும் சிக்கலின்றியும், தெளிவாகவும் மாணவர் விரும்பத்தகு முறையிலும் அமையும்போது மாணவர்களின் குறைபாடுகளை இலகுவாக நீக்கமுடியும். ஆகவே இவற்றைப் பொருத்தமான முறையில் தயாரிக்கக்கூடிய வகையில் ஆசிரியர் தம்மை வளர்த்துக் கொள்ளல் வேண்டும். மாணவர்களின் கற்றலில் சமூகப் பொருளாதார பண்பாட்டு அம்சங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது கல்வியியல் ஆய்வுகளின் முடிவாகும். ஆகவே பரிகாரக் கற்பித்தலுக்காக மாணவர்களின் கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் பற்றி ஆராயும்போது மாணவர்களின் சமூகப் பொருளாதார பண்பாட்டு பின்புலத்தை இணைத்துநோக்கும் திறன் பெற்றவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும்.

கற்பித்தலில் சிரமங்களை எதிர்நோக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் பரிகாரக் கற்பித்தல் செயற்பாட்டில் மாணவர்களின் பெற்றோருடன் பரஸ்பர தொடர்பினை ஆசிரியர் ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். பெற்றோரின் உச்ச ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக மாணவர்களின் குறைகளைத் தீர்த்துக்கொள்ளுதல் இலகுவாய் இருக்கும்.

பரிகாரம் பெறும் மாணவர்களின் குறைகளையும், பிரச்சினைகளையும் பகிரங்கமாக வெளிப்படுத்தி அவர்களைத் துன்புறுத்தல் கூடாது. மிகவும் மென்மையான முறையிலும் இரகசியமாகவும அவர்களது குறைகளை அணுகுதல் வேண்டும். எக்கட்டத்திலும் பரிகாரம்பெறும் ஒவ்வொரு மாணவனும் வகுப்பறையுள் முறையான கற்றல் கற்பித்தல் கருமத்தொடரில் ஈடுபடும் சாதாரணமானதொரு மாணவன் என்பதை ஆசிரியர் மறந்து விடுதல் கூடாது. ஆசிரியர் பன்முகத் தேர்ச்சிகொண்டவராகவும் சமூகப் பொறுப்புடையவராகவும் தன்னை வளர்த்துக் கொள்ளும்போது பரிகாரக் கற்பித்தலில் இலகுவாக வெற்றியடைய முடியும்.

கற்கும் சிரமங்களைக் கொண்ட மாணவர்களை இனங்கண்டு கொள்ளுதல், கற்கும் சிரமங்களின் இடத்தைக் கண்ட றிதல், கற்கும் சிரமத்தின் காரணிகளைக் கண்டறிதல், என்பன சரியான பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளுதல் என அமையும். இக் கற்பித்தல் நுட்பமானது மாணவரின் குறைபாட்டுக்காகப் பிரயோகிக் கப்படும் ஒரு நடவடிக்கை மாத்திரமன்றிச் சிறப்பான மனிதத் திறன்களைக் கண்டறிந்து அவற்றை முறையாக விருத்தி செய்வதற் காகப் பொருத்தமான விதத்தில் வெளிக் காட்டுதலும் கற்றல் செயற்பாட்டினை ஒழுங்கமைப்புக்கு உட்படுத்துவதுமாகும்.

சம்பிரதாயபூர்வமான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினால் ஏற்பட்ட பின் தங்கிய நிலையையும் தோல்வியுடன் கூடிய உவப் பற்ற அனுபவங்களையும் நீக்கி கற்றல் கற்பித்தலை புதிதாக ஒழுங்கமைத் துக்கொள்வதற்கான நம்பிக்கையையும் சுய ஊக்குவிப்பையும் வழங்குகின்ற சவாலாக அமைகின்ற ஒரு செயற்பாடே பரிகாரக் கற்பித்தலாகும். ▽




# புலிகள்



மானமோ பெரிதீழ மண்ணெங்கள் சொந்தம்
மகிழ்வுகள் எமக்கெனும் நோக்கில்
தானமாய்த் தம்மை தந்த செந்தமிழர்
தர்மமே போற்றிடும் புனிதர்.
வானம்பூச் சொரியும் வையகம் கலங்கும்
வகைநெருப் பாற்றிலே குளித்தார்
ஏனிவர் இத்தனை துணிவு பெற்றனரோ
எண்ணிடின் எம்மினம் துலங்கும்.

நெடுந்தீவு மகேஷ்

# நிசங்களின் பகிர்வு

## ஓய்வு பெறும் சரவணபவன்.

**அதிபருமாகி....**

வீட்டுவாசலில் அமர்ந்திருந்தார் சரவணபவன் சேர்.

க.பொ.த உயர்தர வகுப்பின் கலைப் பிரிவு செம்மலை மகாவித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டு நான்கு ஆண்டுகளாகி விட்டன. ஆனால் பல்கலைக்கழக வாசலுக்குச் செல்லும் வாய்ப்பு எவருக்கும் கிடைக்கவில்லை. க.பொ.த சாதாரணதரம் பரீட்சைப் பெறுபேறுகளும் மோசமாகச் சென்றுகொண்டிருந்த பாடசாலையை எப்படி நிமிர வைப்பது. விளையாட்டுத்துறையிலும், கல்வியிலும் வளர்ந்து நின்ற எமது பாடசாலையின் வீழ்ச்சியை எப்படியேனும் தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு எனது மூத்த சகோதரனுடனும் கிராமத்து முற்போக்கு இளைஞன் சண்முகவடிவேலுடனும் கலந்தாலோசித்த பின்தான் புதுக்குடியிருப்பு நோக்கி பயணமானோம்.

பல்கலைக்கழகக் கல்வியை முடித்து விட்டு வந்த எனக்கு, எமது பாடசாலையை வளர்த்தெடுக்க சரவணபவனைத்தவிர வேறு எவரும் மாவட்டத்தில் இருப்பதாகத் தெரிய வில்லை. நான் கேட்டால் எப்படியும் வருவார் என்ற நம்பிக்கையோடுதான் இருவரையும் அழைத்துக்கொண்டு சென்றிருந்தேன். ஏற்கனவே கல்வித்திணைக்களமும் வேறு பலரும் கேட்டும் அவர் அதிபராக செம்மலைக்கு வருவதற்கு மறுத்திருந்தார்.

“எல்லாரும் ஏறின குதிரையில் சக்கடத்தார் ஏறி சறிக்கிவிழுந்தாராம்” என்ற பழமொழியைச் சொல்லிப் பலர் என்னை ஏழனம் செய்து நின்றனர்.

ஆனால், அவர் என்னுடைய ஆசிரியர் என்ற நம்பிக்கை என்னுள் உயர்ந்து நின்றது.

வீட்டுவாசலையடையும் போது மனம் படபடத்துக்கொண்டது. “விஜயரட்ணம் வா” என்று எனது பெயரை விழித்து எல்லோரையும் வரவேற்று இருத்தினார்.

நான்கு ஆண்டுகள் பல்கலைக்கழக வாழ்வின்பின் அந்த சிம்மக்குரல் கேட்டது மகிழ்வையும் இனம்புரியாத பயத்தையும் ஏற்படுத்தியது.

“என்ன வந்தனீங்கள்” கேள்வியால் அவரே விடயத்தை தொடக்குவதற்கு வழியமைத்துத்தந்தார். “சேர், எங்கட பள்ளிக்கூடம் அழிஞ்சு கொண்டு போகுது. ஒரு ரெண்டு வருசம் அதிபராய் வந்து பள்ளிக்கூடத்தை நிமிர்த்திவிடுங்கோ”

எனது சகோதரனும், நண்பன் சண்முகவடிவேலும் எனது முகத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டனர். “விஜயரட்ணம், என்னடாப்பா உன்ர கேள்வி. வீடு வளவு இஞ்ச இருக்குது. மனிசி பிள்ளையளோட பக்கத்தில் கிடக்கிற பள்ளிக்கூடத்துக்கு போய்வந்து சந்தோசமாயிருக்கின்றன். எல்லா வசதியையும் விட்டிட்டு அங்க வந்து வாடகைவீட்டில வாடகை குடுத்து காசுக்கு அரிசிவாங்கி சாப்பிடோணுமெண்டு என்னடாப்பா தலையெழுத்து. வீட்டுக்க நெல்லு, பக்கத்தில பள்ளிக்கூடம், வயல் பிள்ளைகுட்டி எல்லாத்தையும் விட்டிட்டு வரப்போறன் சரிவராது, சரிவராது. நான் வரேல்லடாப்பா” என்று கடகடவென்று சொல்லிமுடித்தபோது என்ர நெஞ்சு

வரண்டுகொண்டு வந்தது. வார்த்தைகள் வரவில்லை.

எனது அண்ணனும் நண்பனும் மௌனமாக எழும்பிச் சென்றுகொண்டிருந்தனர். நானும் எழுந்து கொண்டேன். பேசமுடியாமல் கண்ணீர் பெருகியது.

"நான் கேட்டால் சேர் வருவார். வாருங்கோ என்று சொல்லித் தான் அவர்களையும் கூட்டிக்கொண்டுவந்தனான்'' என அழுதழுது சொல்லிவிட்டு கண்களைத்துடைத்தபடி நடந்தேன், கேற்றடிக்கு சென்ற போது.......

"விஜயரட்ணம் இஞ்ச வா" உரிமையோடுகூடிய அந்த அழைப்பு.... திரும்பிச் செல்கின்றேன். "சரி நீ கேட்டுப்போட்டாய். ரெண்டு வருசம்மட்டும் வாறன். அதுக்கு மேல ஒருநாள்க்கூட என்னை இருக்கும்படி கேக்கக்கூடாது'' என்று அவர் சொல்லும் போது என்னை மறந்த மகிழ்ச்சியேற்பட்டது. உண்மையான ஆசிரிய மாணவ உறவு செத்து விடாது..... என எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

பாடசாலைக்கு அவர் அதிபராகவந்து ரெண்டு வருசமென்ன ஆறுவருடங்கள் உருண்டன. ஒவ்வொரு வருடமும் 80% மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு சென்று கொண்டிருந்தனர். க.பொ.த சாதரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் உச்சநிலை பெற்றது. மாவட்டத்திலேயே அதியுயர் பெறுபேறுகள் செம்மலை மகாவித்தியாலயத்துக்கே கிடைத்துக்கொண்டிருந்த பாடசாலை கொத்தணித் தலைமைப் பாடசாலையாக உயர்ந்தது. சரவணபவன் சேர் அதிபராய், கொத்தணி அதிபராய் மட்டும் உயரவில்லை. செம்மலை மக்களின் மனங்களிலும் உயர்ந்தார். இதுவும் புதுமையல்ல. ஒரு நல்ல அதிபர் எப்படியிருப்பார் என்பதற்கு இரண்டு சம்பவங்களை மட்டும் பகிர்ந்து கொள்கின்றேன்.

## மணலாறு விஜயன்.

முல்லைத்தீவு இராணுவமுகாம் மீது உக்கிரமான தாக்குதல் நடந்து கொண்டிருந்தது. முல்லைத்தீவிலிருந்து மக்களின் வீடுகள் மட்டுமல்ல அரச அலுவலகங்கள் எல்லாமே வெறுமையாகின. கையில் கிடைத்த பொருட்களுடன் உயிரைமட்டும் காப்பாற்றினாற் போதுமென்ற நிலையோடு ஓடினர். வட்டுவாகலில் ஆமியைத் தரையிறக்கியிருந்ததால் கடும் சண்டை நடந்துகொண்டிருந்தது. சண்டைக்குள்ளும் கல்வித்திணைக்களத்துக்குள் புகுந்து எமது கொத்தணிக்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களின் சுயவிபரக்கோவை எல்லாவற்றையும் கட்டியெடுத்துக் கொண்டுவந்தார். முல்லைத்தீவில் தீக்கிரையாகாமல் தப்பிய பைல்கள், எமது கொத்தணிப்பாடசாலை ஆசிரியரின் பைல்கள் மட்டுமே. எவரும் துணிந்து செய்ய நினைக்காத செயலை, தானுண்டு, தன் வாழ்வுண்டு என்று கருதாமல் ஒரு அதிபருக்குரிய கடமையுணர்வுடன் செய்த அந்த நாட்களை மறக்கமுடியாது. நல்ல அதிபர்களாய் கடமைபுரிய நினைப்பவர்க்கு இதுமட்டுமல்ல மறக்கமுடியாத மற்றுமொரு செயலை இங்கு பகிர்ந்து கொள்கின்றேன்.

மணலாற்றில் "ஒப்பரேஷன் மின்னல்" தாக்குதலை இராணுவத்தினர் தொடக்கியிருந்தனர். சியாமாசெட்டி குண்டுவீச்சு விமானங்கள் எமது பாடசாலையின் மூன்று கட்டிடங்கள்மீதும் குண்டுகளை வீசின அதிபர் அலுவலகத்தின்மீது விழுந்த குண்டு எல்லாவற்றையும் சுக்குநூறாக்கியிருந்தது. குண்டுவீச்சு தொடங்கிய அன்று காலையில் பல முக்கிய ஆவணங்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பாக வைத்திருந்தார். எடுத்துச்சென்ற சிலமணித்தியா

லங்களில் விமானங்கள் குண்டு வீசின. சிதறிக்கிடந்த கட்டிடத்துக்குள்ளிருந்து கிண்டிக்கொண்டிருந்தார் சரவணபவன் சேர்.

கல்லுக் குவியலுக்குள் கிடந்த ஐந்துசதம், பத்துச்சதங்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பொறுக்கினார். "சேர் இதென்ன சேர் சில்லறைக்காசெல்லாம் பொறுக்கிக்கொண்டிருக்கின்றியள். மேசை, கதிரை, அலுமாரி, தையல்மெசின்க ளெல்லாமே உடைஞ்சு அழிஞ்சு போச்சு, உந்தச் சில்லறைக்காசை என்னத்துக்கு" என ந..ன் சொன்னபோது.... "விஜயன் இதெல்லாம் சனம் கஸ்ரப்பட்டு உழைச்ச காசு வசதிக் கட்டணக்காசெண்டு சொல லக்கூடாது, ஐந்துசதமொண்டாலும் நாளைக்கு அவர்களுக்குக் கணக்குக் காட் டோணும்." என்று சொல்லிக்கொண்டே கிண்டிக்கிண்டி ஒவ்வொன்றாக எடுத்து சேர்த்துக் கொண்டிருந்தார். கண்ணியமும், நேர்மையும் மிக்க ஒரு உயர்ந்த அதிபராய் அவரை நாம் பார்த்து மகிழ்ந்த நாட்கள் பல.

யாரோ ஒரு சின்னவகுப்பு மாணவன் பாடசாலைச்சுவரில் கரித்துண்டால் "அதிபர் கள்ளன்" என்று எழுதிவிட்டான். மாங்காய்க்கு எறிந்து இன்னொரு மாணவனின் தலையை உடைத்த குற்றத்துக்காக தண்டனை வாங்கிய ஐந்தாம் வகுப்பு மாணவன் தான் இதை எழுதினானென்பதை அடுத்தநாளே பிடித்துவிட்டோம். ஆனால், அந்த வாக்கியம் அவரைப் பெரிதும் துன்பப்படுத்திவிட்டது. அன்றே தனது கடமையைக் கைவிட்டு மாற்றலாகிச் செல்லமுடிவு செய்துவிட்டார். "என்னைக் கள்ளனென்று சொன்ன கிரா மத்தில் ஒரு நிமிஷங்கூட இனி இருக்கக் கூடாது" என கலங்கியபடியே கூறினார்.

அவரை சமாதானப்படுத்தப்பட்டபாடு சொல்ல முடியாதது. பாடசாலை அபிவிருத் திச்சங்கம், பழையமாணவர்சங்கம் எல்லாமே வந்து மன்னிப்புக்கோரியபின்தான் அவர் அமைதியும் ஆறுதலுமடைந்தார். அந்தத் தூய உள்ளம் படைத்த அதிபரைப்போல இன்று ஓர் அதிபரை காண்பது அரிதிலும் அரிது. நல்ல அதிபராய்வாழ நினைப் பவர்க்கு இவரது அதிபர் வாழ்வு நல்ல பாடமாக அமையும்.

ஆறு ஆண்டுகள் எனது முதல் ஆசிரியப்பணியை அவருக்குக்கீழிருந்து செய் வதற்கு எனக்கு பெரும்பேறு கிடைத்தது. அந்த ஆறு ஆண்டுகளில் ஒருநாள் கூட மாவட்ட கல்வித்திணைக்களத்துக்கு நானோ சக ஆசிரியர்களோ சென்றதில்லை. செல்ல வேண்டிய அவசியமேற்பட்டதுமில்லை. ஆசிரியர்களின் தேவைகள் அனைத்தையும் அவரே செய்துவிடுவார்.

1985ம் ஆண்டு ஆசிரியப்பணியை தொடங்கியபோது முதல் ஆண்டில் மூன்று நாட்களும், அடுத்த ஆண்டு ஏழுநாட்களும், மூன்றாவது ஆண்டில் நான்கு நாட்களுமென லீவு எடுத்ததை நினைத்துப்பார்க்கிறேன். அவருக்குகீழ் பணிபுரிந்தால் லீவு எடுப்பது மிகமிகக்கடினமானது. கடமையில் அவர் கண்ணியமாக செயற்பட்டதால் ஆசிரியர்கள் இயல்பாகவே அவரைப் பின்பற்றினார்கள். அதனால் லீவு கேட்கும் துணிவோ கடமை யைத் துஷ்ப்பிரயோகம் செய்யும் சிந்த னையோ எவருக்கும் வளரவில்லை.

செம்மலைக் கிராமத்தில் 99% படித்த வர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராமரீதியாக அதிகூடிய அரச ஊழியர் களும் வாழ்கின்றனரென்று நாம் பெருமை யோடு கூறுகின்றோமென்றால் அந்தப் பெருமை சரவணபவனுக்கேயுரியது. அவர் அதிபராய், கொத்தணியதிபராய் வாழ்ந்த ஆறு ஆண்டுகளும் எமது கிராமத்தின் பொற் காலம் எனலாம்.

ஃ

**நாம் கற்பிப்பது அறிவையல்ல, அறிவை அறியும் அறிவையே.**

**- யாரோ -**

# கல்வியியற் சிந்தனையாளர்கள்

## ரவீந்திரநாத் தாகூர் அவர்கள்

**(1861- 1941)**

இந்தியாவின் கல்கத்தா நகரில் 1861ம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி ரவீந்திரநாத் தாகூர் பெற்றோரின் 14ம் பிள்ளையாகப் பிறந்தார்.

கவிஞர்களாகவும், சங்கீதப் பிரியர் களாகவும், எழுத்தாளர்களாகவும், நடிகர் களாகவும் இவரின் சகோதரர்கள் திகழ்ந்த காரணத்தினால் இல்லம் மகிழ்ச்சிகரமான தாக அமைந்தது. கடைக்குட்டியாகிய இவரின் ஆளுமை வளர்ச்சிக்கும், அறிவியல் வளர்ச் சிக்கும் இவரது இல்லம் ஏற்ற புலமாகியது.

இவரின் இளமைப்பராய காலத்தில் வீட்டுச் சூழலுக்கு மேலாக சமூகத்தி னரிடையே முக்கியமான சில மறுமலர்ச்சி மாற்றங்கள் ஏற்பட்டன. பெண்களது சமூகம் சார்நிலை புதிய வடிவம் பெற்றது. சமூகத்தில் அவர்களது அந்தஸ்து உயர்ந்து முக்கிய இடத்தினைப் பெற்றது. ஆங்கிலப் பாடசாலைகளோடு பல வங்காள மொழிப் பாடசாலைகளும், சமஸ்கிருத மொழிப் பாடசாலைகளும், ஆரம்பிக்கப்பட்டன. ஆங்கில மொழி மூலக்கல்வியைத் தவிர்த்து தாய்மொழிக் கல்வியைத் தாகூர் அவர்கள் பெரிதும் விரும்பினார். தனது 14ம் அகவையில் பாடசாலையிலிருந்து விலகிய தாகூர் வீட்டிலிருந்து கல்வி கற்கத் தொடங்கினார். மல்யுத்தம், சங்கீதம், ஓவியம் என்பன இவர் விரும்பிக் கற்ற பாடங்களாக அமைந்தன. அப்பாடங்களே, அவரில் பெரிதும் செல்வாக்கைச் செலுத்தின. அவரின் தந்தை தெய்வேந்திரநாத், அவரை 'சாந்திகேதன்' என்ற தியான நிலையத்தில் சேர்த்துவிட்டார். அங்கு சமஸ்கிருத மொழியை அவர் கற்றார். 'சாந்திகேதன்' தியான நிலையம் இவரின் ஆளுமையிற் பல மாற்றங்களை ஏற்படுத் தியது. அதன் பயனாக ஹிமாலயமலை அடிவாரத்திற்கும், வயல் வெளிகளுக்கும், காடுகளுக்கும் செல்வதை வழமையாக்கிக் கொண்டார்.



ரவீந்திரநாத் தாகூர்

இவரை ஒரு நிர்வாக அதிகாரி யாகவோ அன்றி ஒரு சட்ட அறிஞராகவோ

ஆக்கவேண்டும் என்று விரும்பிய தந்தையார் 1878ல் இங்கிலாந்திற்கு அனுப்பினார். அங்கு பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தை விரும்பிக் கற்றார். மேலைத்தேய சமூக வாழ்க்கையும் சங்கீதமும் இவர் விரும்பிய பாடங்களாக அமைந்தாலும் படிப்பை முடிவு செய்யாமல் 18 மாதங்களில் இந்தியாவிற்குத் திரும்பிவந்த தாகூர் அவர்கள் ஆக்க இலக்கியத்திலும் சங்கீதத்திலும் முழுமையாக ஈடுபட்டார். தாய் மொழியில் பல கவிதைகளை ஆக்கினார். அவை 1882ல் "சந்திய சங்கீத" என்ற பெயரில் நூலுருப் பெற்றது. அக்காலப் பகுதியில் தொடர்ந்து இவரின் புகழ்பெற்ற படைப்புக்களாகிய "நிர்கார்", "சுவப்னா", "**The awakening of the fountain**" என்பன வெளிவந்தன. 1884 தொடக்கம் 1890ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல கட்டுரைகளையும், விமர்சனங்களையும், நாடகங்களையும், நாவல்களையும் எழுதிக் குவித்தார்.

தாகூர் தனது 23ம் அகவையில் திருமணம் செய்தார். அத்துடன், தனது இலக்கியப் பணியுடன் தந்தையாரின் சமயம் சார்ந்த கடமைகளிலும் ஈடுபட்டார். இக்காலப் பகுதியில் மீண்டும் பிரித்தானியா சென்ற அவர் ஒரு மாதத்தில் தனது பெருந் தோட்டங்களை மேற்பார்வை செய்வதற்காகத் திரும்பினார். தாகூரின் இத்துறை சார்ந்த ஈடுபாடு, அவரின் இலக்கிய ஆக்கங்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது எனலாம். ஆரம்பத்தில் கற்பனை ஆக்கங்களில் ஈடுபட்டவர். இதன் பின்னர் இந்திய விவசாயிகளின், வறிய பரிதாபமான வாழ்க்கையை பிரதிபலிக்கும் ஆக்கங்களை வெளிக்கொணர்வதில் ஈடுபட்டார். இக்காலத்தில் இவரது ஆக்கங்களும் **(Galpaguccha, Chhinnapatra, Chchinnapatravali)** அவரின் கடிதங்களும் வங்காளத்தின் கிராமப்புறத்தையும், வாழ்க்கை முறையையும் செழுமையாகப் பிரதிபலித்தன.

எமது பொறுப்பானவர்கள் என்று கூறப்படுபவர்கள், மிகவும் வசதியான வாழ்க்கையைக் கொண்டுள்ள காரணத்தினாலும் பொதுமக்கள் தமது நிலை பற்றி அறியாதிருப்பதினாலும் நிலமுடையோர் அவர்களைத் தாக்குகின்றனர். பணம் கொடுப்போர் தங்கள் கைப்பிடிக்குள் அவர்களை வைத்துள்ளனர். தொழில்நுட்பவியலாளர் துஸ்பிரயோகம் செய்கின்றனர், பொலிஸ்காரன் அவர்களுடையதை அபகரிக்கின்றான், மதகுரு சுரண்டுகின்றான், நீதிபதி பணம் பறிக்கின்றான்." எனக் கூறுவதன் மூலம் தாகூர் அவர்கள் அக்கால விவசாயிகளின் வாழ்க்கை முறையைப் பற்றித் தாங்கமுடியாத கவலை கொண்டிருந்தார். என்பது புலனாகிறது.

இந்த நிலையிலிருந்து மக்கள் விடுபடக் கல்வியே சிறந்த சாதனம் எனக் கண்டார். நீதிபதி, பொலிஸ்காரன், செல்வந்தன், மதகுரு, நிலமுடையோர் ஆகியோரில் நம்பியிருத்தல் மடமையென்றும், மக்கள் தங்களுடைய கீழ்நிலைக்குரிய காரணங்களை அறியவேண்டும். என்றும் உணர்ந்த தாகூர் அதற்குக் கல்வி அவசியம் என எடுத்துரைத்தார். மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கை நிலைகள் மாற வேண்டுமாயின் கிராம மன்றங்கள் அல்லது பஞ்சாயங்கள் அவசியமெனக் கருதிச் செயற்பட்டார். "ஒற்றுமையின்மை வறுமையைத் தரும். - கூட்டுமுயற்சியே செழிப்புத் தரும்." என்று அவர் உரக்க உரைத்தார்.

1912ல் மீண்டும் பிரித்தானியா செல்வதற்கு முன்னர் தாகூர் அவர்களின் சில ஆக்கங்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு பிரித்தானியாவில் வெளியிடப்பட்டிருந்தன. அவற்றால் கவரப்பட்ட பிரித்தானியரிடையே தாகூர் ஒரு அறிவாளியாகக் கருதப்பட்டார். அவரைக் கவர்ந்தோரும் பிரபலமான ஓவியர் சேர் வில்லியம் றொதன்சியன் **(Sir William Rothenstein)** கவிஞன் டபிள்யூ. பி. ஈஸ்ட் **(W.B. Yeast)**

குறிப்பிடத்தக்கவர்கள். 1931ல் இலக்கியத் திற்கான நோபல் பரிசைத் தாகூர் பெற்றுக் கொண்டார். பிரித்தானியாவிலிருந்து அமெரிக்கா சென்றவர் அங்கிருந்து இந்தியா திரும்பினார். அவர் எழுதிய யதார்த்தபூர்வ நாவல்கள் பல பிரசித்தி பெற்றவை அவற்றுள் **Choke (Eyesore) Naukaduha (The Ereck) Gora** என்பவற்றைக் குறிப் பிடலாம். அவர் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் ஆற்றிய விரிவுரைகள் **Nationlisim, Personality** என்ற இரு தொகுப்புகளாக வெளிவந்துள்ளன.

## இவர் காலத்தில் இந்தியாவின் கல்வி முறை வரலாற்றுப் பின்னணி

1857ம் ஆண்டளவில் அதாவது தாகூர் பிறப்பதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவில் பிரித்தானியரின் கல்விமுறை வேர் ஊன்றியது. ஆங்கிலக் கல்வியையும், ஆங்கில மூலக்கல்வியையும் வளர்ப்பதும் அதனூடாக இந்தியர்களி டையே மேலைத்தேய மோகம் கொண்ட ஒரு பிரிவினரை உருவாக்குவதுமே இக்கல்வி முறையின் நோக்கமாக அமைந் திருந்தது. அதனால் பாரம்பரிய கிராமியக் கல்வியும், இஸ்லாமிய, சமஸ்கிருதக் கல்வியும் பாதிப்படைந்தன. சென்னை, மும்பாய், கல்கத்தா போன்ற பட்டணங்களில் தேசிய பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக் கப்பட்டன. வசதி படைத்த சிறுதொகுதி யினருக்கே கல்வி என்ற நிலை ஏற்பட்ட துடன் கிராமப்புறங்கள் புறக்கணிக்கப்பட்டன. அதேவேளை சமூகப் பொருளாதார நிலையிலும் பிரதேசரீதியான வேறுபாடுகள் ஏற்பட்டன. கல்கத்தா போன்ற பட்டணங்கள் வளர்ச்சியடைந்தன. தொழிற்சாலைகள், புகையிரத சேவை, மாநகர நீர் விநியோகம் ஆகிய பல்வேறுதுறைகள் ஏற்பட்டன. மேல்வகுப்பினர் என்போர் ஆங்கிலேய உடை, பழக்க வழக்கங்கள், வாழ்க்கைமுறை என்பவற்றை உள்வாங்கிக் கலாசாரத்தில்



சுந்தரம் டிவகலாலா

வேறுபட்டனர். பழைய பண்பாட்டு விழுமி யங்கள் கேள்விக்குறியாயின. சமுதாயம் வேறுபட்டு நின்றது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இச்சமூக மாற்றத்திற்கும் கல்வி முறைக்கும் மாறாக; எதிராக நடுத்தர மக்கள் செயற்பட்டனர். தாகூர் அவர்கள் இதனை ஆதரித்து பழைய முறைக் கல்வியை மீண்டும் புதுப்பிக்க விரும்பி னாலும் தேவைக்கேற்ப பாரம்பரியக் கல்வி முறையில் மாற்றம் வேண்டுமெனச் செயற் பட்டார்.

அக்கால கட்டத்தில் வலுவடைந்த இந்தியத் தேசிய இன உணர்விற்கு அவர் தனது எழுத்துக்கள் மூலம் வலுச் சேர்த்தார்.

## தாகூரின் கல்வியியற் சிந்தனைகள்

தாகூர் கல்வியியற் சிந்தனைகளை ஒரு ஆவணத்திலிருந்து முழுமையாகப் பெற்றுக் கொள்ளமுடியாது. அவரது ஆக்கங் களையும், பேச்சுக்களையும் ஆய்வு செய்தல்

மூலமே அறிந்து கொள்ளமுடியும். அவரது ஆக்கங்கள் பெரும்பாலானவை ஆங்கில மொழியில் எழுதப்பட்டவை. அவரின் ஆக்கங்களை ஆய்வு செய்த அறிஞர்கள் அவரின் கல்வியியற் சிந்தனைகளை மூன்று கட்டங்களாகப் பிரித்தனர்.

### முதலாம் கட்டம் ~ (1892 ~ 1901)

இக்காலப்பகுதியில் இந்தியாவின் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் வளர்ச்சி யற்றதன்மைக்கும் மக்களின் கல்வியறிவற்ற தன்மையே காரணம் என அவர் கூறினார். அக்காலத்தில் நிலவிய கல்விமுறை பணிம னைகளுக்குத் தேவையான இலிகிதர்களை உண்டாக்குவதையும், பிரித்தானியரின் வியா பாரத்தைப் பெருக்குவதையும், நோக்க மாகக் கொண்டிருந்தமையால், அக்கல்வி முறையானது, மக்களுக்குச் சுதந்திரத் தையும், மகிழ்ச்சியையும் வழங்கவில்லை. அது மட்டுமன்றி இந்தியர்களது பண்பாட்டுப் பாரம்பரியத்தை அக்கல்விமுறை முழுமை யாகப் புறக்கணித்திருந்ததாகவும் அவர் குற்றம் சாட்டினார். அக்கல்வி முறையானது இந்தியர்களின் வளர்ச்சிக்கு எவ்விதத்திலும் உதவவில்லை என்பதுடன் ஆங்கில மூலக்கல்வி அவர்களுக்குச் சுமையாகவும் அமைந்திருந்தது என்பது அவரின் கருத் தாகும். இந்திய மக்களிடையே விஞ்ஞான அறிவை வளர்ப்பதற்கோ, விசாரித்து அறியும் பண்பை உருவாக்கவோ அக்கல்வி முறை உதவவில்லை. இந்தியர்களிடையே கல்வி கற்றவர்கள், கல்வி, அறிவு அற்றவர்கள் என்ற இரு பிரிவினரை உருவாக்கியதும் இதுவே என்பது அவரின் கருத்தாகும். அதன்படி கல்வி அறிவு அற்றவர்கள், என்றால் அது இந்தியக் கிராமப்புற மக்களையே குறித்தும் நின்றது.

### இரண்டாம் கட்டம் ~ (1901 ~ 1918)

தாகூர் அவர்கள் இந்தியாவிற்கு ஏற்றவொரு தேசியக் கல்வி முறையை அமைப்பதில் ஈடுபட்டார். ஒவ்வொரு நாடும் தனித்துவமானதென்றும் அந்நாடுகளின் தேவைகளுக்கேற்ப கல்வி முறை அமைய வேண்டுமெனவும் கருதினார். அதற்க மைவாக 1901ம் ஆண்டு சாந்திகேதனில் ஓர் ஆச்சிரமப் பாடசாலையை ஆரம்பித்தார். இப்பாடசாலை இந்தியாவிலிருந்த புராதன காட்டுப்பாடசாலைக்கு ஒப்பானதாக அமைந் திருந்தது. நட்பை வளர்த்தல், பிறருக்குச் செய்யும் உதவியில் பலனை எதிர்பார்க் காமை ஆகியவற்றை தமது கல்விக்கொள் கையில் மூலக்கருத்தாகக் கொண்டிருந்தார். அதே வேளையில் விஞ்ஞானம் போன்ற நவீன பாடங்களுக்கும் முக்கியத்துவம் அளித்தார். 1915ம் ஆண்டில் அவர் எழுதிய "கல்வி என்னும் வாகனம்" **(Shikshar Vahana)** என்ற கட்டுரையில் கல்வி தாய் மொழியில் வழங்கப்பட வேண்டுமென்பதற்கு முக்கியத்துவமளித்திருந்தார். ஆங்கிலத்தின் மூலம் கற்பித்தல், தன்மயமாதலுக்கு உதவ முடியாதெனவும் அது நகரப்புறப்பணக்கார வர்க்கத்தினருக்கே கிடைக்கக் கூடியதாக அமையுமெனவும் விளக்கினார். கிராமப் புறங்களுக்கும் கல்வியின் பயன்கிடைக்க வேண்டுமென்ற கருத்துடன் கல்வியைச் சுய மொழியில் கிடைக்கச்செய்ய வேண்டு மென்றும் அதனை வழங்கும் பாடசாலைகள் இயற்கைச் சூழல் கொண்டதாக அமைய வேண்டுமெனவும் கூறினார். கல்வியானது நல்லுணர்வையும், விவேகத்தையும் வளர்ப் பதற்கு உதவவேண்டுமென்று வாதிட்டார். இவரது பாடசாலைக் கட்டமைப்புக் கொள்கையானது. தபோவனத்தைக் கருத்திற் கொண்டதாகவே அமைந்திருந்தது. இந்தி யாவின் தேசிய கல்விக்கொள்கை அமைப்பு இந்தியர்களது நாகரீகத்தின் பண்புகளை அறிவதற்கு உதவவேண்டுமென்றும் வியா பார நோக்கம், ஏகாதிபத்தியத்தன்மை அற்ற வையாக இருக்கவேண்டுமெனவும் தேசியத் திற்குப் பதிலாக அது பிரபஞ்சத்தை இலக் காகக் கொண்டமைய வேண்டுமெனவும்

கூறினார். தனிமனிதனின் முழுமையான வளர்ச்சிக்கு கல்வி உதவவேண்டுமென்ற கொள்கையை அவர் கொண்டிருந்தார்.

## மூன்றாம் கட்டம் (1918 ~ 1941)

"விஸ்வபாரதி" என்பது தாகூரின் உலக பல்கலைக்கழகத்தின் கருப்பொருளாகும். 1913ம் ஆண்டின் பின்னர் உலகின் பல நாடுகளுக்கும் சென்று அதன் மூலம் பல்வேறு நாட்டு அறிஞர்களுக்கும் அவர் அறிமுகமானார். இவ்வறிஞர்களது அறிமுகத்தின் தாக்கத்தினால் உலகின் எந்த வேறுபாடுமற்ற கல்வி வளர்க்கப்பட வேண்டுமெனக் கருதினார். இக்காலப் பகுதியில் இவரது கல்வியியல் சிந்தனைகள் கிராமப் புறப் பாடசாலைகள் என்ற நிலையிலிருந்து பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதாக விரிந்தது. அக்காலத்தில் அவரது கல்விக் கொள்கையை பின்வருமாறு வெளியிட்டார்.

"எந்த நாட்டினது கல்வியும் அந்த நாட்டினது மக்களோடு நெருங்கிய தொடர்புடையது. ஆனால் எமது கல்வியோ எழுதுவினைஞர்களையும், வழக்கறிஞர்களையும், வைத்தியர்களையும், நீதவான்களையும் உற்பத்தி செய்வதனை இலக்காகக் கொண்டுள்ளது. இக்கல்வியானது விவசாயிகளையோ, குயவர்களையோ, எண்ணெய் ஊற்றுபவர்களையோ சென்றடையவில்லை. வேறு எந்தவொரு கல்விச் சமூகத்திலும் இந்த நிலை இல்லை. இந்தியாவினது பல்கலைக்கழகம் உண்மையாக நன்மை பயக்க வேண்டுமேயானால் அங்கு இந்தியாவின் பொருளாதாரம், விவசாயம், சுகாதாரம், மருத்துவம், கிராமங்களின் நாளாந்த வாழ்க்கைமுறை என்பவற்றைப் போதிப்பவையாக அவை அமையவேண்டும். பாடசாலையில் விவசாயம் செய்ய வேண்டும். கால்நடைகள் வளர்க்கப்படல் வேண்டும், நெசவு இடம்பெற வேண்டும். இவை நவீன முறையில் செயற்பட வேண்டும் அதனையே நான் "விஸ்வபாரதி" என அழைக்க விரும்புகின்றேன்". என்ற கூற்றின் மூலம் அவர் தனது கல்விக் கொள்கையை வெளியிட்டார்.

1919ம் ஆண்டு அவர் எழுதிய கட்டுரைகளில் அக்காலத்தில் இந்தியாவில் இயங்கிய பல்கலைக்கழகங்களின் பொருத்தமற்ற தன்மையை வலுவாக விமர்சித்தார். இவற்றின் உற்பத்திகளான பட்டதாரிகள் அரசாங்கத் தொழில் தவிர்ந்த வேறு எதற்கும் லாயக்கற்றவரெனக் கூறினார்.

கல்வியை எவ்வாறு வாழ்க்கைக்கு ஏற்றதாக அமைக்க முடியும் என்பதற்கு அவர் 1919 - 1936 வரை எழுதிய கட்டுரைகளில் விளக்கியுள்ளார். அவரது மொழியில் "இந்தியர்களது சிந்தனைகள் எவ்வாறு அமைகின்றது? அவற்றின் ஊற்று என்ன? பின்புலம் என்ன? என்பவற்றை அறிய உதவாத பல்கலைக்கழகங்களின் கல்வி வெளிநாட்டறிவை இரவலாகப் பெறமட்டுமே உதவும். கல்வியின் இயற்கையான வெற்றி என்னவென்றால் அது வழங்கிய அறிவு மட்டுமே அவ்வறிவினால் பல்கலைக்கழகங்கள் இந்தியாவிற்குத் தேவையான ஆராச்சிகளையும், புதிய கண்டுபிடிப்புக்களையும் வழங்கக்கூடியதாக அமைய வேண்டும்". கல்வி வாழ்க்கைக்குத் தேவையான ஜீவனோபாயத்தை மட்டும் வழங்கக் கூடியதாக இருக்கக்கூடாதெனவும் தனிமனித திருப்தி, தனிமனித வளர்ச்சி என்பனவற்றினை இலக்காகக் கொண்டிருக்க வேண்டுமெனவும் கூறினார். தேவையேற்படின் வெளிநாட்டிலிருந்து அறிவைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் ஆனால் அந்த அறிவு இந்தியக் கல்விக்கு அத்திவாரமாக அமையக்கூடாதென்றும் வாதிட்டார். மேலைத் தேயத்தவர்கள் விஞ்ஞானம், தொழிநுட்பம் ஊடாக அதிகாரத்தையும், செழுமையையும் பெற்றது போல் இந்தியாவும், விஞ்ஞானத்திலும், தொழிநுட்பத்திலும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அதன் மூலமே இந்தியர்களது வாழ்க்கை செழிப்பானதாகவும்,

ஆரோக்கியமானதாகவும் மாற்றம் பெற முடியுமென்றும், அத்தகைய கல்வி இந்தியாவினுடைய தனித்தன்மை வாய்ந்ததத்துவார்த்த ஆன்மீக அறிவோடு இணைக்கப்பட வேண்டுமெனவும் கூறினார். தத்துவார்த்தத்தோடும், ஆன்மீகத்தோடும் வளர்க்கப்படாத கல்வி முரண்பாட்டை வளர்க்குமென்றார்.

தாகூர் அவர்களுடைய கல்விச் சிந்தனைகள் ரூசோ, வோபல், மொன்டசூரி அம்மையார் போன்றவர்களது சிந்தனைகளை ஒத்தனவாக இருந்ததெனக் கல்வியியலாளர்கள் கூறுவர். உதாரணமாக ரூசோ அவர்கள் தாகூரைப் போன்று இயற்கையானது, குழந்தையின் ஆசிரியர் என்று கூறியிருந்தார். இருந்தபோதும் தாகூர் அவர்கள் ஓர் ஆசிரியனது முக்கியத்துவத்தை விசேடமாகக் கருத்திற் கொண்டிருதார். வோபல் அவர்களும் தாகூர் அவர்களும் கல்வியினூடாக ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டுமென விளைந்ததுடன் குழந்தைப்பருவத்தில் விளையாட்டினூடாகவும் அவர்கள் கற்க வேண்டுமெனக் கூறியிருந்தனர். தாகூர் அவர்கள் மேலும் ஒருபடி சென்று செயற்பாட்டுக் கல்விக்கும் முக்கியத்துவமளித்தார்.

இவரது கருத்தினையே பெரும்பாலும் இவர் காலத்தில் வாழ்ந்த ரோல்ஸ் ரோய், மொன்டசூரி அம்மையார் போன்றோரும் கொண்டிருந்தனர். ஆனால் எச்சந்தர்ப்பத்திலும் தனிமையாகச் சிந்தித்தாரன்றி எவரின் செல்வாக்குக்கும் அவர் உட்படவில்லை. தாகூரினது கல்வியியற் சிந்தனைகள் மகாத்மா காந்தியை வெகுவாகக் கவர்ந்தனவெனலாம். இந்திய அரசியலில் மகாத்மாவினுடைய வருகை வரை தாகூர் அவர்களது கல்வியியற் சிந்தனைகள் இந்திய அரசியலில் முக்கியத்துவம் பெறவில்லை. தாகூர் அவர்களது கல்வியியற் சிந்தனைகள் நவீன கல்வியியற் சிந்தனைகளை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிப்பதைத் தவிர்த்து மாணவர்கள் கற்பதற்கு உதவவேண்டும் என்பதை இலக்காகக் கொண்டிருந்தது. ஆசிரியர்கள் மாணவர்களுடைய அறிவுப்பசியை வளர்க்கவும், தைரியத்தைத் தூண்டவும் பாடசாலைகள் உதவவேண்டுமென்பதில் அக்கறையோடிருந்தார் அவர். மாணவர்களைத் தண்டிப்பதற்கு எதிரானவர். ஒழுக்கமென்பது மாணவர்களது வாழ்க்கையின் இலக்காக அமைவதற்கு ஆசிரியர்கள் உதவவேண்டுமென்பது அவரது சிறப்பான கருத்தாகும்.

தாகூரின் கல்வியியற் சிந்தனையால் கவரப்பட்டு அவற்றிற்குச் செயலுருவம் கொடுத்த மகாத்மாகாந்தி அவர்களின் கல்வியியற் சிந்தனைகளை அடுத்த விளக்கிற் பார்ப்போம்.

மூலம் - நர்மடேஸ்வர் ஜா (Narmadeshwar Jah) UNESCO - வெளியீடு


பாவ்லோவ்

**மணி அடித்து அழைத்து உணவு போட்டுப் பழக்கப்பட்ட நாயின் நாக்கிலிருந்து எச்சிலை வரவழைக்க உணவு வைக்கவே தேவையில்லை. வெறும் மணியை அடித்தாலே போதும் நாயின் நாக்கில் தானாகவே எச்சில் சுரக்கும். அதுதான் Conditional Reflex என்று கண்டுபிடித்துச் சொன்ன ரஷ்ய அறிஞர் பாவ்லோவ் அவர்கள் நோபல் பரிசை வென்றார்.**





# பல்துறை பயில்வோம்.

உனக்குள்ளே கனவுபே ருணர்வுகள் விரிவு
கனத்திடும் நினைவுநீ கற்றவை அறிவு
இனித்திடும் வாழ்வினுக் கெது சிறப்புயர்வு
மனத்தொளிர் புதுமைகல் மாண்புற ஆக்கு

சொன்னதைச் சொல்லுதல் சொல்வழி மகிமை
அன்னமெய் போற்றுதல் அதுவுமெம் மரபு
என்னகண் டறிந்தனம் எதுபுதி தாய்ந்தோம்
தன்னிகரிலா வளம் தரணியின் செழுமை

பெற்றதை ஈவதில் பேரின்பம் கொள்வோம்
முற்றிலும் முயன்றுசீர் முடிவுகள் காண்போம்
அற்றதா புதுமைகள் ஆய்வுகள் செய்வோம்
பற்றுடன் பணிசெயப் பல்துறை பயில்வோம்.

- உமாபாரதி -

நூல் அறிமுகம்

# இத்தரற் சகலருமறிய...

## "இன்பச் சிமிழ்"

(சிறுவர் பாடல்கள்)

கவிஞர். மண்டூர் தேசிகன்

வெளியீடு:

போரதீவுப் பற்று பிரதேச அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம்.

முனைத்தீவு. பெரியபோரதீவு.

விலை ரூபா 150/=




நாட்டுப்பாடல் மணங்கமழும் மண்டூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் ஞானதேசிகன். மட்டக்களப்பு இலக்கியப் பாரம்பரியத்தில் பிறந்த அவரது சிறுவர் இலக்கிய ஆக்கச் சிறப்புக்கு இன்பச்சிமிழ் என்னும் இனிய சிறுவர் பாடநூல் ஓர் அடையாளமாகும்.

இவரது தந்தையாரும் ஒரு கவிஞர் என்ற மரபுவழி மாண்பும் அதிபராய், ஆசிரியராய் பணியாற்றிய இவரது அனுபவப்பகிர்வும் அவரிடத்தே சிறுவர் கவிதைகள் விளையக் காரணமாயின எனலாம்.

"இன்பச்சிமிழ் சிறுவர் பாடல்கள்" நூலிலிருந்து அவரின் சிறுவர் பாடற் புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

"ஆனால் கணினி ஒரு முட்டாள்
சுயமாய் எதையும் செய்யாதான்
தூண்டிவிட்டால் துலங்காதான்
துளியும் உணர்ச்சி இல்லாதான்

மனித மூளைக் கட்டளைக்கு
வசமாய் சேவை செய் தோழன்
ஆசை அச்சம் இல்லாதான்
அண்டிக் கெடுக்கத் தெரியாதான்
ஏளனமாகச் சீரித் தெம்மை
இம்சைப்படுத்த மாட்டாதான்."



சிறுகதை

# முரண்பாடுகள்

அந்த மேலதிகாரிகளின் போட்டிக்குள் சிக்குண்டு அல்லலுற்ற முருகையா கிளாக்கர் இரண்டு தோணிகளில் கால்வைத்த கதையாக விழிபிதுங்க நின்றிருந்தார்.

இரண்டு முதலாளிகளின் கீழ் வேலை செய்வதில் உள்ள சிரமத்தை இன்று முருகையாக் கிளாக்கர் முழுமையாக அனுபவித்துக் கொண்டிருந்தார்.

அரசாங்க உத்தியோகமென்றாலென்ன, தனியார்துறைப் பதவிகளாக இருந்தாலென்ன எங்குமே நான் பெரியவன் நீ சிறியவன் என்ற உயர்வு பேசி பட்டம் பதவிகளைச் சொல்லிப் போட்டியிட்டுப் பெருமைகொள்ளும் வித்துவக் காய்ச்சலுக்குக் குறைவில்லை.

இத்தகைய போலிக்குள் மூழ்கித் தவிக்கும் இந்தத் திணைக்களமும் பல்வேறு பிரச்சனைகளுக்கு ஆழ்ந்து கிடப்பதில் ஆச்சரியம் இல்லைத்தான்.

அந்தக் கருத்தரங்கிற்கான அழைப்புக் கடிதத்தில் இடம்பெற்ற மேலதிகாரியின் கையொப்பம் பதிலொப்பமானாலும் அது ஆனந்தத்தின் ஒப்பமாகிப் போனதைப் பார்த்த பணிப்பாளர் லிங்கத்திற்கு கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

"யாருடைய கையொப்பத்தை இதில் வாங்கி அனுப்பியிருக்கிறீர்" என்று கிளாக்கரை விழித்து உரப்பினார்.

"அது சேர் நீங்கள் லீவில் நின்ற போது உங்களுக்குப் பதிலாக ஆனந்தம் ஐயா கையொப்பம் இட்டார்.'' என்று பௌவியமாகப் பதில் சொன்ன கிளாக்கரை லிங்கம் ஐயா எரித்துவிடுவதைப் போல் பார்த்தார்.

ஒரே பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்றவர்களான பணிப்பாளர் லிங்கமும், பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆனந்தனும் பரீட்சைகளின் மூலமும் பல்வேறு முயற்சிகளின் மூலமும் முன்னுக்கு வந்தவர்கள் தாம்.

இந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவிக்கு ஒருவரே நியமிக்கப்பட வேண்டும் என்ற கட்டாயத்தின் பேரில் லிங்கம் அவர்களுக்கு அது கிடைத்தது என்னவோ உண்மைதான். ஆனால் அதே திணைக்களத்தில் பணிப்பாளரின் கடமைக்கு உதவும் வகையில் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட ஆனந்தம் அவர்களின் நியமனம் குறித்து லிங்கம் அவர்களுக்குச் சிறிது ஒவ்வாத மனம் உண்டு. இதனால் ஆனந்தன் மீது அவருக்கு ஓர் இனம் புரியாத வெறுப்புணர்வு வளர்ந்து கொண்டே வந்தது.

தமக்குச் சமமாக தமக்கும் மேலாக இந்தப் பணிப்பாளர் பதவியில் ஆனந்தன் வளர்ந்துவிடக்கூடாது என்பதில் லிங்கத்தாரின் கவனம் நிறையவே இருந்தது. இதனால் திணைக்கள நடவடிக்கைகளில் பிரச்சனைகள் ஏற்படுவது சகசமாகி விட்டது.

பணிப்பாளர் லிங்கம், பணிப்பாளர் ஆனந்தத்தின் மீது கொண்டிருந்த ஆத்திரத்தின் வெளிப்பாடாகவே எதிரில் நின்ற முருகையா கிளாக்கரை ஏசித் தீர்த்தார்.

நாளை நடைபெறப்போகும் கருத்தரங்கில் பங்குகொள்வதற்கென எங்கெல்லாமோ இருந்து அழைக்கப்பட்ட அலுவலர்கள் ஒவ்வொருவராக வந்து அங்கு கூடிவிட்டனர் அவர்கள் தத்தமது வரவைப் பதிவு செய்யும் ஆவலோடு முருகையாக் கிளாக்கரை எதிர்பார்த்திருந்தனர்.

# செல்லமகேந்திரன்

கருமுகில் படர்ந்தவானமாய் முகம் கறுக்க பணிப்பாளரின் முன்னே கைகட்டிப் பதில் சொல்லி நின்ற முருகையாக் கிளாக் கருக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை.

''என்னுடைய அனுமதியைப் பெறாமல் எப்படி நீர் கடிதங்களை அனுப்பினீர். யார் உமக்கு அனுமதி தந்தது?'' என்றெல்லாம் கேள்விமேல் கேள்வி களை அடுக்கிக்கொண்டே போன லிங்கத் தாருக்கு பதில் சொல்லி அலுத்துப்போன கிளாக்கர் மௌனமானார்.

பட்டம், பதவி, உயர்வு எல்லாவற் றையும் அடிக்கடி சொல்லிப் பெருமையுறும் லிங்கத்தாரின் வழக்கமான புளுகுவார்த்தை களை அந்த அலுவலகமே கேட்டுச் சலுப் படைந்திருந்தது.

கையொப்பம் வைக்கவும், கடிதம் அனுப்பவும் லிங்கத்தாருக்குச் சமமாக ஆனந்தம் ஐயா உயர்ந்துவிடக்கூடாது என்பதில் லிங்கத்தார் நிறையவே கவனம் செலுத்தி வந்தார்.

லிங்கத்தார் லீவில் நிற்க நேரிடும் போதெல்லாம் எந்தப் பணியும் ஆனந்தம் அவர்களின் கைக்குப் போய்விடக்கூடாது என்ற வகையில் எல்லா ஒழுங்குகளையும் முன்னதாகவே நாசூக்காகச் செய்து விடுவதில் அவர் கெட்டிக்காரர்.

இன்று அந்தக் கருத்தரங்கிற்கான அழைப்புக்கடிதத்தில் கையொப்பம் இடும் சந்தர்ப்பம் ஆனந்தத்திற்கு ஏற்பட்டமை குறித்து அவருக்கு அளவற்ற மன எரிச்சல். இவ்வகைச் சந்தர்ப்பங்கள் ஏற்படாமற் பார்த்துக்கொள்வதில் அவர் ஏற்படுத்திக் கொண்ட கவனத்தில் தோன்றிய தளர்வு அவருக்கு ஆத்திரத்தை வருவித்தது.

என்னதான் பதில் சொன்னாலும் அதனை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் லிங்கம் அவர்கள் இல்லை என்பதை முருகையாக் கிளாக்கர் மாத்திரமல்ல, அந்த முழு அலுவலகமுமே நன்றாக அறிந் திருந்தது.

மௌனத்தைத் தொடர்வதாக முடிவெடுத்துக் கொண்ட கிளாக்கர், அமைதி யாய் பணிப்பாளரின் எதிரிலிருந்த ஆசனத் தில் அமர்ந்து கொண்டார்.

இந்நிலையில், அழைப்புக் கடிதத்தில் கையொப்பமிட்ட ஆனந்தமோ பணிப்பாளரின் முன் தோன்றிப் பிரச்சினையை பெரிதாக்க விரும்பாமல் தமது அறையி லேயே இருந்து கொண்டார்.

நாளை நடைபெறப்போகும் கருத் தரங்கும் செயலமர்வும் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டப்பணிமனைகளில் கடமையாற்றும் உயர் அதிகாரிகளுக் கானது. இதனை நடாத்துவதன் மூலம் மாறிவரும் புதிய நிர்வாகச்சீராக்கங் களுக்கேற்ப உயரதிகாரிகளை வழிப்படுத்த அது பெரிதும் பயன்படும் என்பதாய் மேலிடம் நம்பிக்கை கொண்டிருந்தது.

கிளாக்கரின் மௌனத்தால் உற் சாகம் குன்றிய பணிப்பாளர், தனது நர்த்த னத்தை சிறிது நிறுத்திச் சுற்றும் முற்றும் பார்த்தார்.

கருத்தரங்கிற்கோ வருகை தந்து தமது வரவைப் பதியக் காத்திருந்த அலுவலர்கள் சிலரின் முகங்கள் அவரின் கண்களில் தென்பட்டன.

அவர்களின் வரவினைப் பதிவதுடன், நாளை ஆரம்பமாகும் கருத்தரங்கிற்கான முன்னேற்பாடுகளையும் கவனிக்க வேண்டும்



என்ற எண்ணம் அவரது உள்ளத்தில் மேலெழுந்தது. அதனால் முருகையாக் கிளாக்கரை விரைவிலேயே சுமுகமான உரையாடலுக்குள் கொண்டுவந்தார். அத்துடன் வந்திருந்த அலுவலர்களுக்கான தங்குமிட ஒழுங்குகளை உடனடியாகக் கவனிக்கும்படி விரைவுபடுத்தினார்.

கோபம் வந்தால் உச்சத்திற்கு ஏறுவதும், கோபம் தணியப் பொத்தென்று கீழே பணிவதும் பணிப்பாளர் லிங்கம் அவர்களின் வழக்கம்தான்.

புதிய கல்விச் சீர்திருத்தச் செயற்றிட்டங்கள், வாழ்வியல் அனுபவங்களின் ஊடாக மனப்பாங்கில் மாற்றங்களையும், மனித நேயம், சமத்துவம், சமாதானம் என்பவற்றைச் சமூகத்தில் விளங்கச்செய்யும் வீரியத்தையும் கொண்டதெனக் கூறப்பட்டு வருவதைக் கிளாக்கர் முருகையா, பலரும் சொல்லக் கேட்டிருக்கின்றார்.

பாடசாலைகளில் கல்வியைப் பாடங்களாகக் கற்றுப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்து பட்டங்களைப் பெற்றுக் கொண்டால் போதுமென்ற நோக்கிலேயே நிகழ்ந்து வந்த கற்றல் கற்பித்தல் நாடகம் மாறிவிட்டது. மாணவர்கள் தமக்காகச் சிந்திப்பதற்கும், தீர்மானங்களை எடுப்பதற்கும் செயற்படுவதற்கும் ஏற்ற வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டும் புதிய கல்விமுறை நடைமுறைக்கு வந்துவிட்டது. கிளாக்கரின் சிந்தனை புதிய கல்விச்சீராக்க நடைமுறைகளைச் சுற்றி வலம் வந்தது.

சிந்தனை கலைய நடத்ததெல்லாவற்றையும் மறந்து கோவைகளைத் தூக்கிக் கொண்டு வெளியேவந்த கிளாக்கர், தனக்குத் தரப்பட்ட பணியைத் தொடர்வதில் உற்சாகம் பெற்றார்.

கருத்தரங்கில் பங்குகொள்ள வந்த கல்விப்புல அதிகாரிகள் தமது வரவைப் பதிய, கிளாக்கரைச் சூழ்ந்து கொண்டனர். "என்னையா இத்தனை நேரமாக நாங்கள் இங்கு நின்று தூங்கித் தளர்கிறோம். இப்பதான் உங்களுக்கு எங்கள் நினைவு வந்ததா?" என்று அலுவலர் ஒருவர் சிறிது ஆத்திரத்தோடு கேட்டார்.

"எங்களைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டுதான் உங்கள் பிரச்சனைகளைப் பேசித்தீர்க்கிறீர்களாக்கும்." என்று ஒருவர் நையாண்டி செய்தார்.

வந்தவர்கள் எல்லோரிடமும் வரவுக்கான கையொப்பத்தை வாங்குவதில் ஈடுபட்டிருந்த முருகையா கிளாக்கர் அதிகாரிகளின் கிண்டல்களுக்கும், கேலிகளுக்கும் காது கொடுக்காமல் தமது வேலையில் கவனமானார்.

அனைவரும் கையொப்பமிட்டு விட்டனர் என்பதை உறுதி செய்துகொண்ட கிளாக்கர், பத்திரங்கள் யாவற்றையும் ஒழுங்காகச் சேர்த்து கோவைக்குள் அடுக்கி வைத்தார்.

நாளை நடைபெறப்போகும் கருத்தரங்கினையும் அதனை நடாத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட திணைக்களப் பணிப்பாளர்களையும் எண்ணிப்பார்த்த கிளாக்கருக்கு ஒரே மயக்கம்.

இந்தக் கருத்தரங்கின் வள ஆளணியினராக முன்னிற்கும் பணிப்பாளரின் மனப்பாங்கும், செயற்பாடுகளும் அவர் நடத்தப் போகும் கருத்தரங்கிற்கு எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதை எண்ணிப்பார்த்த கிளாக்கரின் உதடுகள் அவரையும் அறியாமலே முறுவலித்தன.

நிறுவனங்களின் சுமுகமான செயற்பாட்டிற்கும், அவற்றின் ஊடாகச் சமூகம் அடைந்து தெளிவுறும் வாழ்க்கை அனுபவங்களுக்கும் "சேவைக்காலப் பயிற்சிகள்" உதவி நிற்கின்றன.

பயிற்சிகளை வழங்குவோர் அவை பற்றிப் படித்துப் பட்டம்பெற்றாலும் வாழ்க்கை அனுபவத்தைப் பெற்றிராமல் பரீட்சை வினாக்களுக்கு விடை எழுதிப் பழக்கப்பட்டுப் போனதால் ஏற்படும் பிரச்சனைகள் இன்னமும் தீர்ந்துவிடுவதாக இல்லை.

முருகையாக் கிளாக்கர் பெருமூச் செறிந்தார்.

"முரண்பாடு தீர்வுக்கான கருத்தரங்கு" என்ற தலைப்புடன் அழைப்புக் கடிதங்களை அனுப்பும்போதே முரண்பாடுகள் தோன்றி விசுவரூபம் எடுத்து நிற்கின்றன.

முரண்பாடுகளைத் தீர்க்க வழிகூறுவோரே தமக்கிடையே தோன்றி யுள்ள முரண்பாடுகளைத் தீர்க்கும் திராணி யற்றுத் தவிக்கும்போது முரண்பாடு தீர்வுக் கான கருத்தரங்கு முரண்பட்டு நிற்பதாய் எண்ணி எண்ணியே முருகையாக் கிளாக்கார் மூளையைக் குழப்பிக் கொண்டார்.

---

**"சிந்தனை வளர்ச்சியானது மொழியினால் தீர்மானிக்கப்படுவதாகும். அதாவது சிந்தனைக்கான மொழிக்கருவிகளாலும், குழந்தையின் சமூக பண்பாட்டு அனுபவித்தினால் அது தீர்மானிக்கப்படுகிறது. பியாஜேயின் ஆய்வுகள் நமக்கு எடுத்துக்காட்டியவற்றுக்கேற்ப குழந்தையின் தர்க்க உணர்வு வளர்ச்சியானது அக்குழந்தையின் சமூகநிலைப்படுத்தப்பட்ட பேச்சின் நேரடிப் பயன்பாடாகும். குழந்தையின் புலமை வளர்ச்சியானது சிந்தனைக்கான மொழியாட்சியிலேயே தங்கியுள்ளது."**

**- வைகொற்ஸ்கி - Vygotsky**



# வாசித்தோம் வாசிப்போம்

## படிப்பு ஒரு சுமை:

வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவிப்பதற்குப் படிப்பு என்றுமே நமக்கு ஒரு முட்டுக்கட்டையாகத்தான் இருக்கிறது. ஒன்று, பல்வேறு பிரச்சனைகளின் காரணமாகப் பலர் படிக்காமலேயே போய்விடுகிறார்கள். இதனால் வாழ்க்கை என்றால் என்னவென்று அவர்களுக்குப் புரிவதே இல்லை.

இன்னொரு நிலையில் நிறையப் படித்து, இரண்டு, மூன்று பி.ஹெச்டி வாங்கி விடுகிறார்கள் சிலர். நிறையப் படித்து விட்டதால் அவர்களைப் பற்றி அவர்களுக்கே கொஞ்சம் மிதப்பான எண்ணம் வந்துவிடுகிறது. சுப்பீரியாரிட்டி காம்ப்ளக்ஸில் மாட்டித் தவிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். முடிவில் வாழ்க்கையை அனுபவிக்க முடியாமல் திணறுகிறார்கள்.

**உண்மையில் சந்தோஷத்துக்கும், ஆனந்தத்திற்கும் படிப்பு நிச்சயம் முட்டுக்கட்டை இல்லை. படிப்பு என்பது நீங்கள் உங்களைப் புரிந்துகொள்வதற்காகவே. உங்களை நீங்கள் புரிந்துகொண்டபின்தான் கடவுளைப் புரிந்துகொள்ளமுடியும். சாதாரண ஆன்மாக்களாக இருக்கும் நாம், பேரான்மாவோடு கலக்கமுடியும்.**

எப்படிப் படிப்பது என்பதைப் பற்றி நமக்குப் பல தவறான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. இன்னும் ஒரு படி மேலே சென்று சொல்ல வேண்டுமெனில், எப்படியெல்லாம் குழந்தைகளைப் படிக்க வைக்கக் கூடாதோ, அப்படியெல்லாம் படிக்க வைத்துக்கொண்டிருக்கின்றோம். கல்வி கற்றுத்தருகிறோம் என்கிற பெயரில் பிஞ்சுக் குழந்தைகளை ஆசிரியர்கள் படுத்துகிறபாடு கொடுமையானது. குழந்தைகளுக்கு எதை, எப்படிக் கற்றுத்தரவேண்டும் என்பதை ஆசிரியர்களுக்குக் கற்றுத்தரவேண்டியது இப்போது அவசியத்திலும் அவசியம்.

**குழந்தைகள் அபரிமிதமான கற்பனைவளம் கொண்டவர்கள், நாம் நினைத்துப் பார்க்காத கோணங்களில் எல்லாம் சிந்தித்துச் செயல்படும் வல்லமை கொண்டவர்கள்.** அவர்களின் கிரியா சக்தியை நாம் தெரிந்து கொள்வதில்லை. நாம் குழந்தைகளை எழுத்துகள் எழுதப்படாத சிலேட்டுகள் என்று நினைக்கிறோம். அதில் அந்தக் குழந்தையே ஏதாவது எழுதி விடுவதற்குள், நாம் எழுதிவிடவேண்டும் என்று துடிக்கிறோம்.

விளைவு, விளையாடவேண்டிய வயதில், குழந்தைகள் விரல் வீங்க எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அணிலையும், ஆந்தையையும் நேரில் பார்த்தறியவேண்டிய நேரத்தில் புத்தகங்களில் மட்டுமே பார்க்கிறார்கள். தாய்மொழியில் புதுப்புது வார்த்தைகளை கற்றுக்கொள்ளவேண்டிய நேரத்தில், புரியாதமொழியில் "ரைம்ஸ்" பாடு கிறார்கள்.

படிப்பதற்காக இப்படிக் கட்டாயப் படுத்தும்போது, படிப்பின்மீதே மனதில் வெறுப்பு உண்டாகிறது. இதனால் படிப்பின் மீதான கவனம் சிதறி, தொலைக்காட்சி, விளையாட்டு, அரட்டை கெட்ட பழக்கவழக் கங்கள் என்று தேடி ஓட ஆரம்பித்து விடு கிறார்கள். ஓரளவுக்கு வயதான பிறகும் இப்படிப்பட்ட வற்புறுத்தல் தொடர்வதால், இளைஞர்கள் போதைப் பழக்கங்களுக் குக்கூட அடிமையாகி விடுகிறார்கள்.

சமீபத்தில் தன் இருபத்திரண்டு வயது மகனோடு என்னைத்தேடி ஒருவர் வந்தார். மகன், பெங்களூரில் மருத்துவக் கல்லூரியில் படிக்கிறானாம். மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் படித்தானோ இல்லையோ..... நன்றாக கஞ்சா இழுக்கக் கற்றுக்கொண்டான். போதை மாத்திரைகள், ஊசிகள் என்று அவன் காலம் போதையில் வேகமாகக் கழிக்கிறது.

இப்படியே போனால் மகனைப் பறிகொடுத்துவிட வேண்டியதுதான் என்று பயந்து என்னிடம் அழைத்து வந்திருந்தார் அந்தப் பெரியவர்.

பையனோடு சில நிமிடங்கள் பேசிய பிறகுதான் தெரிந்தது. மருத்துவம் படிக்க அவனுக்கு எந்த விருப்பமும் இல்லை என்பது. பெற்றோரின் கட்டாயத்தின் பேரில் வேண்டாவெறுப்பாக மருத்துவம் படிக்க ஆரம்பித்தவன், இலகுவாக போதை வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறான்.

அவன் நிலையை அவனிடமே பக்கு வமாக எடுத்துச் சொன்னபோது, தன் தவறை எளிதில் புரிந்துகொண்டான். அவனை மிகச் சுலபமாக அந்தப் பழக்கத்திலிருந்து மீட்டுவர முடிந்தது.

நன்றாகப் படிக்காதவர்கள், நன்றாகப் படிக்க இயலாதவர்கள் என்பது தவறு. படிக்கிற காலத்தில் நன்றாகப் படிக்க முடியாதவர்கள் என்பதுதான் சரி.

**உண்மையில் எல்லோரும் நன்றாகப் படிக்கும் திறமை கொண்டவர்கள்தான்.**

படிப்பு என்பது இன்றைய வாழ்க் கைக்கு இன்றைய உலகத்திற்கு அவசிய மானசுமை, கல்வியை சுமை என்று நான் சொல்வதைக் கேட்டு, உங்களில் பலருக்கும் ஆச்சரியம் ஏற்படலாம். இந்தச் சுமையை சுகமான சுமை என்று புரிந்துகொள்ளுங்கள்.

ஒரு மனிதனின் முதல் இருபத் தொருவயதை மூன்று பருவங்களாகப் பிரிக் கலாம். ஒன்றுமுதல் ஏழு வயது வரை இருக்கும் பருவம் முதற் பருவம். இந்தப் பருவம் குழந்தைப் பருவம். அம்மாவோடு இருக்கவேண்டும்; கேட்பது கிடைக்க வேண்டும்; எல்லோரும் தன்னை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று ஆசைப்படும் பருவம் குழந்தைகள் தம்மைப் புரிந்து கொள்ளாத அந்தப்பருவத்தில் நாம் அவர்களின் எல்லாக் காரியங்களையும் சகித்துக்கொள்கிற சக்தியைப் பெற வேண்டும்.

அம்மாவிடமிருந்தும், தன் விளை யாட்டிலிருந்தும் தன்னைப் பிரிக்கும் யாரையும், குழந்தை வெறுக்கவே செய்யும். பள்ளிக்கூடம், படிப்பு, ஆசிரியர் எல்லாம் சேர்ந்து தன்னைக் கட்டுப்படுத்துவதாக, கஷ்டப்படுத்துவதாகக் குழந்தைகள் நினைப் பதாற்தான் பள்ளிக்குச்செல்லும் முன்பு சில நாட்களாவது குழந்தைகள் அழுகின்றன. பள்ளிக்கூடம் விட்டவுடன் ஜெயிலிலிருந்து தப்பித்துவரும் கைதிபோல ஓடோடி வெளியே வருவதற்கும் காரணம் அதுதான்.

எட்டுமுதல் பதினான்கு வயது வரை உள்ள குழந்தைகளுக்கு நிறைய விளை யாடவேண்டும் என்று ஆசை. ஆனால் அப்படி விளையாடுவதற்கான எல்லா விதமான வாய்ப்பையும் ''ஸ்பெஷல் கிளாஸ்,'' "ரியூஷன்" போன்றவை அபகரித்துக்கொண்டு விடு கின்றன. எனவே பல ஆசைகள் நிறை

வேறாமல் நிராசைகளாகவே மனதில் தங்கி விடுகின்றன.

பதினான்கு வயது முதல் இருபத்தொரு வயதுவரை உள்ள பருவம், மூன்றாம் பருவம். ஒரு குழந்தை இளைஞனாகும் நேரம் இது. வாழ்க்கையில் முதன்முறையாக "ஹார்மோன்களோடு" போரிடவேண்டிய நேரம். பொறுப்பை ஏற்றுக்கொண்டு சாதனையாளன் ஆகும் நேரம்.

இந்த மூன்று காலகட்டத்திலும் வெவ்வேறு விதமான பிரச்சனைகள். இந்தப் பிரச்சனைகளிலிருந்து சுலபமாகவோ அல்லது மற்றவர்களின் உதவியுடனோ சமாளித்து விடுகிறவர்கள்தான் ஆனந்தத்தை அனுபவிக்கும் மனிதர்களாக வளர்ந்து நிற்கிறார்கள்.

இளைஞர்களே! படிக்கிற காலத்தில் நன்றாகப் படியுங்கள். உங்களால் முடியுமா என்கிற சந்தேகமே உங்களுக்கு வேண்டாம். உங்களால் எல்லாம்முடியும் என்பதே மறுக்க முடியாத உண்மை.

நீங்கள் சாதிக்கத் தகுதியானவர் என்ற நம்பிக்கையையும், உங்களால் சாதிக்கமுடியும் என்கிற நம்பிக்கையையும் எப்போதும் மனதில் ஞாபகப்படுத்திக் கொண்டே இருங்கள்.

**தூங்கியதும், துக்கப்பட்டதும் போதும். எழுந்திருங்கள். சாதனை என்கிற ஓட்டத்திற்கு முடிவே இல்லை.**

பரமஹம்ச ஸ்ரீ நித்தியானந்தசுவாமிகள் அவர்களின் "கதவைத்திற காற்று வரட்டும்" என்ற கட்டுரையிலிருந்து

# ஏ.கே. 47



**ஏ. கே. 47 என்பது பிரபல்யமான ஒரு துப்பாக்கியின் பெயராகும். "ஓட்டமெற்றிக் கலாஷ்நிக்கோவ் 47" என்பதே அதன் முழுப்பெயராகும். இதனைக் கண்டு பிடித்தவர் ஒரு ரஷ்ய நாட்டவர். அவரது பெயரும், துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டும் சேர்த்தே துப்பாக்கியின் பெயர் வழங்கப்படுகிறது.**

**அமைதியை விரும்பி ஆக்கப்பட்ட ஏ.கே.47, இன்று ஐந்து கோடிக்கு மேல் உற்பத்தி செய்யப்பட்டு உலகின் பல பாகங்களிலும் பாதுகாப்புத் தேவைகளுக்காக பாவனையில் உள்ளன. ரஷ்யரான "மிகைல் கலாஷ்நிக்கோவ்" அவர்கள் 1947ல் இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்துகொண்டிருந்த காலத்தில் யேர்மனியரிடமிருந்து ரஷ்ய மக்களைப் பாதுகாக்க நினைத்து வடிவமைத்த துப்பாக்கியால் உலகம் முழுவதுமே அமைதி குலைந்திருப்பதாக இன்று நம்பப்படுகிறது.**

**ரஷ்ய இராணுவ வீரராக இருந்த கலாஷ்நிக்கோவ் அமைதியை விரும்பினார். அவரின் கண்டு பிடிப்பு உலகின் அமைதிக்காக அமைதியைக் குலைத்தபடி இன்று உலகை ஆளுகிறது என்பது மனதை நெருடும் ஓர் உண்மைதான்.**



தாமரைப் பூக்களில் தழைத்த கவிதைகளே
சாமரை வீசுகின்றோம் உம்புகழ் பேசுகின்றோம்
வாழ்க்கையை தமக்கன்றே வாழாத வள்ளல்களே
நாட்களை நமக்காக கரைத்த உள்ளங்களே

நவயுக தத்துவங்களை ஆள்கின்ற செல்வங்களே
நமக்குக் கல்வியை ஊட்டிய தெய்வங்களே
தேனான மொழியை வளர்த்த தென்றல்களே
தேசம் நிமிர்ந்திட உழைத்த குன்றங்களே

முத்துப் பந்தல்களில் முகிழ்த்த முக்கனிகளே
மூத்த மொழிவழி பூத்த தத்துவங்களே
சத்திய வாழ்வின் சந்தன நிலவுகளே
சமதர்ம நெறியின் சரித்திர உறவுகளே

# வணக்கத்துக்குரிய கல்வித் தெய்வங்கள்

சொத்துச் சுகங்கள் சேர்க்காத செம்மல்களே
சூரியனோடு பேசிடும் அக்கினிச் சுவாலைகளே
சக்கரம் போலச் சுற்றிடும் மேகங்களே
சாதனை நூல்கள் ஆக்கிடும் தாகங்களே

பூக்கள் தூவியும் கால்களை வணங்குகின்றோம்.
பூமியில் கிரீடம் சூட்டியே வாழ்த்துகின்றோம்.
பாக்கள் பாடி உலகத்தில் மகிழ்கின்றோம்
பாரினில் உயர்ந்தவும் பாதங்கள் பணிகிறோம்.

**பு. திலீப்காந்த்**

# வாழ்த்துகிறார்கள்

✦ கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக வெளிவந்துகொண்டிருக்கும் விளக்கு சஞ்சிகையின் வளர்ச்சி கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். ஆசிரியத்துவத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது சேவைக்காலம் முழுவதும் கற்கவேண்டியவர்கள். கற்பித்தலைச் சிறப்பாக மேற்கொள்ளுவதற்கு விளக்கு சஞ்சிகை வழங்கும் உயர்வான கருத்துக்கள் பாராட்டப்படவேண்டியவை. ஆசிரிய சமூகத்துக்கு மிகவும் உபயோகமான விளக்கு மேலும் சுடர்விட்டுப் பிரகாசிக்க வாழ்த்துகிறேன்.

**மானிப்பாய் இந்துக்கல்லூரி,** **திரு. க. ஜெகநாதன்**
**மானிப்பாய்.** **அதிபர்.**

✦ இன்றைய போட்டிச் சமூகத்தில் ஆசிரியத்தொழிலை ஒரு வேலைவாய்ப்பாக ஏற்றிருந்தாலும் இறைவன் நம்மையொரு "தெய்வீகப் பணிக்கு" அழைத்துள்ளார் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளவேண்டும். இம்மகத்தான பணியை மனநிறைவுடன் முன்னெடுத்துச் செல்ல ஆசிரியரிடத்தில் எடுத்துக்காட்டான வாழ்வு, தியாகம், அர்ப்பணிப்புடன் கூடிய சேவை என்பன அவசியமாகும். ஆசிரியவாண்மை விருத்தியும் கல்வி உலகில் அகலமாக்கப்படவேண்டும்.

ஞானவிளக்குகள் என்று தத்துவஞானி சோக்கிரட்டீஸ் அவர்களினால் வர்ணிக்கப்பட்ட ஆசிரிய பெருந்தகைகளுக்கு மேலும் ஒளியூட்ட விளக்கு சஞ்சிகை வெளிவருவதைக் கண்டு பெருமகிழ்வடைகிறேன். அதன் பணி தொடர வாழ்த்துகிறேன்.

**புனித பத்திரிசியார் கல்லூரி,** **அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்.**
**யாழ்ப்பாணம்.** **அதிபர்.**

✦ இலைமறை காயென ஆசிரியர்கள் பலரிடம் காணப்படும் திறமைகளை வெளிக்கொணர களம் அமைத்துக் கொடுப்பதுடன் நூலறிவிலும் பட்டறிவு மேலானது என்பதை உணர்ந்து சிறந்த அனுபவசாலிகளது அனுபவங்களை விளக்கு சஞ்சிகையினூடாக வெளிக்கொணர்வது சிறப்பான அம்சமாகும். கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை இலகுவாக்கும் நோக்குடன் மாணவர் கல்வியில் ஆசிரியர்களின் பங்களிப்புக்களை எடுத்துரைக்கும் பாங்கு உயரவானது. விளக்கு தனது பணியில் மென்மேலும் உயர வாழ்த்துகிறேன்.

**பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்,** **திரு. வி. நடராஜா**
**அதிபர்.**

✦ விளக்கு சஞ்சிகையின் நீண்டகால வாசகன் நான். தமிழ்த் தேசத்திலே ஆசிரியவாண்மையை விளக்கு சஞ்சிகை உயர்த்தி வருவது பேரெழுச்சியே. விளக்கு சஞ்சிகையின் உலக ஆசிரியர் நாள் சிறப்பு மலர் வெளிவருவது குறித்து அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். ஆரம்ப காலத்திலிருந்தே எழுதி வரும் திரு. அ. பஞ்சலிங்கம், திரு. பா. தனபாலன், திரு. ந. அனந்தராஜ், கலாநிதி சபா ஜெயராசா ஆகியோரின் பங்களிப்பை கௌரவிக்கிறேன். மேலும் புதிய அம்சங்களுடன் விளக்கு வெளிவர எல்லாப் பாடசாலைகளிலும் விளக்கு விநியோகிக்கப்பட ஒழுங்குகள் செய்யப்படவேண்டுமென விரும்பு கிறேன். ஆவன செய்யுங்கள்.

**ஈட்டுக்கோட்டை கிழக்கு,**
**ஈட்டுக்கோட்டை.**

**க. நவரட்ணம்**
**ஓய்வுபெற்ற ஆசிரியர்.**

✦ விளக்கு சஞ்சிகைகளைத் தொடர்ந்து வாசிக்கின்றேன். ஆக்கங்கள் யாவுமே தரமானவை. எனது பாராட்டுக்கள். நான் எழுதும் தரமான ஆக்கங்களை பிரசுரிக்கின்றீர்கள். உண்மைச் சம்பவங்கள் பல என் அனுபவத்தில் உள்ளன. அவை ஆசிரிய சமூகத்தின் மேம்பாட்டிற்கு உதவும் என எண்ணுகிறேன். அவற்றைத் தொடர்ந்தும் அனுப்பி வைக்கவுள்ளேன். பிரசுரிப்பீர்களென நம்புகிறேன்.

**கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை,**
**யாழ்ப்பாணம்.**

**பூநகர் கவிப்பிரியா**
**ஆசிரியர்.**

✦ விளக்கு சஞ்சிகைகளை வாசிக்கும் தோறும் ஆசிரிய வாண்மை விருத்திக்கு அவை ஆற்றும் பணி மகத்தானது என்பதை உணருகின்றேன். விளக்கு சஞ்சிகைக்கென இத்துடன் அனுப்பப்படும் கவிதையைத் தரமானதெனிற் பிரசுரிப்பீர்களென நம்புகிறேன்.

**கல்விக்கோட்டம்,**
**கண்டாவளை.**

***சி. இரத்தினேஸ்வரி***

✦ 1995ம் ஆண்டு விளக்கு சஞ்சிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் "நியாயமான தவறுகள்" என்னும் எனது சிறுகதை இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தது. அக்காலத்தில் இடம்பெற்ற இடப்பெயர்வினால் விளக்கு சஞ்சிகை வெளிவரவில்லை. ஆகையினால் எனது சிறுகதையும் வெளி வரவில்லை. அச்சிறுகதை தங்களிடம் இருப்பின் பிரசுரிக்கும்படி பணியுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**ஆத்திக்குளி,**
**முருங்கன்.**

**பி. பி. அந்தோனிப்பிள்ளை**
**ஓய்வுபெற்ற அதிபர்.**

✱ **தங்கள் வேண்டுகோள் எங்கள் கவனத்திற்கு ஈர்க்கப்பட்டுள்ளது.**
- ஆசிரியர் "விளக்கு" - ✱

# விளக்கு

கல்வியியலாளர்களே!

ஆசிரியர்களே!

மாணவர்களின் கல்வி மேம்பட ஒன்றுபட்டு உழைப்போம். பாடசாலை முகாமைத்துவம், ஆசிரியர் செயலாற்றல், புதிதாக்கும் புலமை விளைந்திட விளக்கு தாளிகையை வாசிப்போம்.

விளக்கு

சஞ்சிகையைத் தொடர்ந்து வாசியுங்கள்,
உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.
சந்தாதாரராகுங்கள்.

விளக்கு

# விளக்கின் வெளிச்சத்தில்

- கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் ''விளக்கு'' எனும் ஆசிரிய வாண்மை விருத்திச் சஞ்சிகையை விரும்பி வாசிக்கும் வாசகர் களாகிய எம் மத்தியில் அதன், தேவையும், சேவையும் தொடர்வது கண்டு பெருமிதமடைவோம்.
- ஆசிரியர்கள், ஆசிரியர்களாக, ஆசிரியத்துவத்தின் மகிமையை உணர்ந்து செயலாற்ற ''விளக்கு'' ஆற்றும் பணி மகத்துவமானது.
- ஆசிரியர்களாகிய நாம் நமது தொழிலைப் பற்றுறுதியுடனும், வளரும் மாணவ சமூகத்தின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடனும் முன்னெடுத்துச் செல்ல வாசிப்போம். அதன்வழி எழுதுவதற்கு ஊக்கம் பெறுவோம்.
- நாளைய சமுதாயம் நமது கைகளில் ஒப்படைக்கப்பட்டமையை உணர்வோம். நமது அனுபவமும் நமது கற்றலின் விருத்தியும், ஆசிரியத்துவத்தின் பெருமைக்கும், புகழுக்கும் அடையாளங்களாக மிளிர சேவை மனப்பாங்குடன் ஆசிரியப் பணியைத் தொடர்வோம்.
- ''விளக்கு'' சஞ்சிகையின் தொடர்ச்சியான வரவுக்காக நாம் செலவீடும் ஒவ்வொரு மணித்துளியும் நமது மாணவர்களின் நல்வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும், துணைபுரியும் வகையில் உதவுமென்பதை மனங்கொள்வோம்.
- ''விளக்கு'' தமிழ் நிலத்தின் கல்விப் பேரொளியாய்ப் பிரகாசிக்க ஆசிரியர் களாகிய நமது ஆய்வுகளும், எழுத்தாக்கங்களும் விளக்கில் வெளிவர வழி சமைப்போம்.
- மாணவர்களின் வாசிப்புப்பழக்கம் மேலோங்கவும், எழுத்தாற்றல் விருத்தியுறவும் ஆசிரியர்களாகிய நாம் வாசிப்போம், எழுதுவோம்
- ''விளக்கு'' சஞ்சிகை ஆசிரியர்களின் ஆக்கங்களை விருப்புடன் பிரசுரிக்கக் காத்திருக்கிறது.

''கல்வியும் மொழியும் பண்பாடும் நிலமும் எமது இனக் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்களாகும்.''

**''தேசியத்தலைவர் மாண்புமிகு வே. பிரபாகரன் அவர்கள்.**

பிள்ளையார் நேரச்சுப்பதிப்பகம், நல்லூர்.